1366

gistered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 10—No. 9.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"



| | | |
|---|---|---|
| லர் கo | ஈசுவர ஆண்டு புரட்டாசித் திங்கள்<br>1937ஆம் செப்டெம்பர்மீ | இதழ் கூ |



உள்ளுறை



| | பக்கம் |
|---|---|
| விரல் வித்தை ... | ௩௩௫ |
| திருவாரூரார் ... ... | ௩௩௭ |
| தேன்கூடு ... ... ... | ௩௪௧ |
| மாணவன் மன நிகழ்ச்சி ... | ௩௪௪ |
| சைவ சேனை ... ... | [illegible] |
| திருக்கழுக்குன்றம் மலைமருந்துப் பத்தி ... | [illegible] |
| சுந்தரர் நாடகம் ... ... ... | ௩௬௫ |



பத்திராசிரியர் : அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.

சைவ சித்தாந்த மகாசமாஜம்

"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1937 தனிப் பிரதி அணா 4.

OFFICE OF THE ...
21 SEP 1937
MADRAS

உ

சிவமயம்

# முக்கிய அறிக்கை

பெங்களூரில் 10-9-1937 முதல் நடைபெறுமென்று சென்ற இதழில் அறிவிக்கப்பட்ட சமாஜ விசேஷ மகாநாடு எதிர்பாராத சில காரணங்கட்காக ஒரு வாரம் கழித்து 17-9-1937ல் தொடங்கிப் பழைய நிகழ்ச்சி முறையிற் குறித்தவாறே நடைபெறும். வரவேற்பு உபசரிப்புத் தொண்டுகளை மேற்கொண்டுள்ள பெங்களூர் ஸ்ரீகணபதி விலாச சபையினர் சமாஜ அங்கத்தினரனைவரையும் வரவேற்று உபசரிக்க அவாவுகின்றபடியால் சமாஜத்தினரனைவரும் தவிராது விஜயம் செய்யுமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்

ம. பாலசுப்பிரமணியன்.

---

## சமாஜத்தின் சைவத் தேர்வுகள்

சென்ற சில ஆண்டுகளில் இத்தேர்வுகட்கு விண்ணப்பிக்கும் கடைசி நாள் செப்டம்பர்௴ 20௳ என்றிருந்தபடியால், அந்த நினைவாக இவ்வாண்டில் 20-8-37க்குள் விண்ணப்பிக்கத் தவிர்ந்த செய்தியைச் சில அன்பர்கள் தெரிவித்துள்ளார்கள். அவர்கட்கும் ஏனையோருக்கும் சௌகரியஞ்செய்வதை முன்னிட்டு ௸ விண்ணப்பக் கடைசி நாள் 20-9-37 என்று இவ்வாண்டிலும் இதன் மூலம் குறிக்கப்படுகிறது. இந்நாட்குள் தாமதமின்றி தேர்வுகட்குச் செல்ல விரும்புவோர் விண்ணப்பத் தாள்களையும் கட்டணங்களையும் அனுப்புவார்களாக.

Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.

| | | |
|---|---|---|
| மலர் ௧௦ | ஈசுவர ஆண்டு புரட்டாசித் திங்கள்<br>1937௵ செப்டெம்பர்௴ | இதழ் ௯ |

## விரல் வித்தை

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

திருவையாறு என்பது காவிரியின் கரையில் தஞ்சாவூருக் கருகிலுள்ள ஒரு சிறந்த தலம். தஞ்சையிலிருந்து இவ்வூருக்குப் போகும் வழியில் வடவாறு, விண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி என்ற ஐந்து ஆறுகளையும் பாலங்களின் மேற்கடந்து செல்ல வேண்டும். காவிரியின் ஐந்து பிரிவுகளாகிய இவ்வைந்து ஆறுகள் இவ்விடத்தில் நெருங்கி ஓடுவதாலும் வேறுசில புராணவரலாறுகளை யொட்டியும் இத்தலத்துக்குத் திருஐயாறு என்ற பெயர் வழங்குகிறது. இந்தியாவின் வடமேற்கிலுள்ள மாகாணத்திலும் இதைப் போலவே ஐந்து ஆறுகள் ஓடுவதால் அம்மாகாணத்துக்கே "பஞ்சாப்" என்ற பெயர் வழங்குகிறது. திருவையாற்றிலுள்ள இறைவனுக்கும் பஞ்சாபகேசன் என்ற பெயருண்டு. ஐயாறப்பர் என்ற தமிழ்ப் பெயரே இவ்வாறு வட

மொழியில் வழங்குகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் கயிலாயக் கோலம் கண்ட சிறப்பு இத்தலத்துக்கே யுரியது.

இத்தலத்தில் காவிரிக் கரையில் தென்றற்காற்றின் இன்பத்தை நுகர்வதற்கும், மாலைக் கடன்களை முடித்தற்கும், நீராடி அந்திப்போதில் வந்தனைசெய்து கோயில் செல்வதற்குமாகப் பலர் நாடோறும் மாலையில் கும்பல் கும்பலாக வருவது வழக்கம். ஒருநாள் மாலையில் அவ்வூரில் வசிக்கும் பஞ்சநதம் பிள்ளையும் அவருடைய ஒன்பது வயதுள்ள புதல்வி சரோஜனியும் மணலில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். "மாதர் பிறைக்கண்ணியானை" என்ற தேவாரப்பதிகத்தைச் சரோஜனி இனிய குரலில் நல்ல இசையோடு பாடினாள். தந்தையார் கேட்டுப் பெரிதும் இன்புற்றார்; தமது பெண், பள்ளிக்கூடத்திற் படிக்கும் பாடங்களைப்பற்றி விசாரித்தார். சிரிப்பூட்டும் சிறுகதைகள் சிலவற்றைச் சொன்னார். திருத்தொண்டர் வரலாறுகளிற் சிலவற்றையும் அழகாக எடுத்துரைத்தார்.

அப்போது எதிரில் சில சிவனடியார்களும் அந்தணர்களும் ஆற்றில் முழங்கால் தண்ணீரில் நின்றுகொண்டு கை விரல்களாற் சில ஜாடைகள் காட்டி உதடுகள் மட்டும் அசையச் சில மந்திரங்களை ஓசைபடாமற் சொல்லிக் கொண்டிருந்தார்கள். கைவிரல்களை மாற்றி ஒன்று சேர்த்துப் பசுமாட்டின் மடியிலுள்ள முலைக்காம்புகளைப் போல நான்கு மூலைக்கு நான்காக வைத்துக் கீழே கவிழ்த்துத் தண்ணீருக்குக் காட்டினார்கள் சிலர். இதைக் கூர்ந்து கவனித்தாள் சரோஜனி.

"என்னப்பா! இது என்ன வேடிக்கையாயிருக்கிறது! நானும் பக்கத்து வீட்டு ஜாநகியும் விளையாடும் போது அவள் பசுவின் மடியென்று இப்படியே விரல்களைக் காட்டுவாள். நான் பால் கறப்பதாக விரல்களை உருவி 'சொய்ஞ் சொய்ஞ்' என்று சொல்லுவேன். இவ்வளவு பெரிய வயதானவர்

கள் கூடவா இம்மாதிரி ஆற்றங்கரையில் விளையாடுவது?'' என்று கேட்டாள் சரோஜனி.

"அதென்ன சரோஜா, நீபுத்திசாலிப் பெண்ணுயிற்றே, நீகூடவா இப்படி யெல்லாம் கேட்பது?'' என்றார் பஞ்சநதம் பிள்ளை.

சரோஜனி:—"எனக்குத் தெரியாமல் தானே கேட்கிறேனப்பா, நீங்கள் இப்படிக் கோபித்துக் கொள்ளலாமா?''

பஞ்சநதம் பிள்ளை :—"கோபமில்லை, கண்ணே! பெரியவர்கள் கடவுளை நோக்கிச் செய்வதை விளையாடுவதாக நீ எண்ணலாமா?''

ச. "அது எனக்குத் தெரிந்தால் நான் அப்படியெல்லாம் சொல்ல மாட்டேனப்பா; கடவுளை நோக்கி இப்படியேன் செய்ய வேண்டுமப்பா?''

ப. "கடவுளே இவ்வுலகத்தையும் உடம்பையும் நமக்குக் கொடுத்தவர். தினந்தோறும் சூரிய உதயத்திலும் உச்சியிலும் அஸ்தமனத்திலுமாக மூன்றுவேளை நாம் அவருக்கு நன்றிசெலுத்தவேண்டும். இவ்வாறு முச்சந்தியிலும் செலுத்தும் வந்தனமே சந்தியா வந்தனம் எனப்படும். இதைச்செய்யும் முறை பல சாஸ்திரங்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.''

ச. "அந்த சாஸ்திரங்களில் கைவிரல்களைப் பால் கறப்பது போலக் காட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதா?''

ப. "ஆம், ஆம், அப்படிகூட நாம் செய்யவேண்டுமென்று சாஸ்திரத்திலிருக்கிறது.''

ச. "எதற்காக அப்படி சாஸ்திரம் சொல்கிறது?''

ப. "நம்முடைய உயிரைச் சுத்தம் செய்வதற்காக''

ச. "இப்படி செய்தால் நம்முடைய உயிர் சுத்தமாகுமா? மேலும் நம்முடைய உயிரை ஏன் சுத்தம் செய்ய வேண்டும்?"

ப. "தெருவிலே குப்பையிலும் மண்ணிலும் புரண்டு வருகிற ஒரு குழந்தைக்கு ஒரு பட்டுத்துணியை உடனே யாராவது கட்டுவார்களா? நன்றாகக் கழுவிக் குளிப்பாட்டிய பிறகே கட்டுவார்கள். அழுக்குள்ள உடம்பில் சுத்தமான பட்டைச் சேர்ப்பதற்கு நாம் கூசுவது போலவே, அழுக்குள்ள உயிரில் சுத்தமான கடவுள் சேர்வதற்குக் கூசுவார்."

ச "உயிருக்கு என்ன அழுக்குண்டு? அதை எப்படிக் கழுவிப் போக்குவது?"

ப. "உயிரின் அழுக்குக்கு மலம் என்று பெயர். அதைப் போக்கும் வழிகளுள் ஒன்று தண்ணீரை மந்திரித்து உட் கொண்டு, திரு நீற்றை மந்திரித்துப் பூசிக் கொள்வது. தண்ணீரை மந்திரிப்பதில் எட்டு படிகள் உண்டு. அவற்றுள் ஒரு படிதான் பால் கறப்பது போற் காட்டுவது. அதற்குத் தேனு முத்திரை யென்று பெயர். இவ்வாறு காட்டுவதால் காமதேனு என்ற தேவலோகப் பசுவின் மடியிலிருந்து அமிர்தம் சொரிந்து தண்ணீரைச் சுத்தம் செய்வதாகப் பாவனை செய்யப் படுகிறது. இவ்வகையிலும் வேறு ஏழு வகையிலும் மந்திரம் கிரியை பாவனைகளால் சுத்தம் செய்யப் பட்ட தண்ணீரை சூரியனுக்கு அர்ப்பணம் செய்வதாலும், ஆசமனம் செய்வதாலும், திரு நீற்றைச் சில மந்திரங்களோடு பூசிக் கொள்வதாலும் உயிரைப் பற்றிய மும் மலங்களும் நீங்குவதாகப் பாவித்துப் பிறகு நமது விரல்களிலும் உடலிலும் சிவ பெருமானை எழுந்தருளச் செய்து அங்க நியாசம் கர நியாசம் என்பவற்றைச் செய்து பூசிக்க வேண்டும். உடலைக் கழுவிப் பட்டு சாத்துவது போலவே இவ்வாறு உயிரைக் கழுவிய பிறகே கடவுளை வருவித்துப் பூசிக்க வேண்டும்."

ச. "தாங்கள் சொல்வது மிகவும் அதிசயமாயிருக்கிற தப்பா. நானும் நாளைமுதல் அப்படியெல்லாம் செய்ய வேண்டாமா. எனக்கும் கற்றுக் கொடுங்களப்பா."

ப. உனக்குக் கலியாண மானவுடன் தீக்ஷை செய்வித்து இதை யெல்லாம் கற்றுக் கொடுப்பேன். வா, போகலாம், இருட்டிவிட்டது. வழியிலே மூங்கில் முள்ளிருக்கும். பார்த்து நட."

# திருவாரூரர்

## VI

[P. தியாகராஜன்]

### சுந்தரரும் பெண்பாலாரும்

பரவை மகிழ்ந்திட வாற்றிலிட்ட
பசும்பொன் னதனைப் பரிந்து தேடி
யுரவுமிகு திருக்குளத்தி லெடுத்தளித்த
வாய்மையுளத் தோர்ந்து மோனம்
விரவுசிவ ஞானியர்தஞ் சிந்தை
கவர்ந்திடு மின்னை வேண்டி நாயேன்
இரவுபக லகலாது வழுத்துகின்றே
னுயிர்க் குயிராம் இன்ப வாழ்வே.

—வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம் - சோமசுந்தர நாயகர்.

சிலர் சுந்தரப் பெருமானைப் பெண்களுக்கு மிகவும் ஈடுபட்டவர் என்றும் அவர் பெண் பொருட்டுச் சிவபெருமானைத் தகாத செயல் புரியச் செய்தனர் என்றும் குறை கூறுவர். மேற்சொன்ன செயல்கள் மேற்பார்வைக்கு அப்படித் தோன்றுகின்றன. ஆனால் அவருடைய பாடல்களை ஊன்றிப்

பார்ப்போர்க்கு ஆரூரரது தன்மைகளின் உண்மை வெளிப் படும். அவ்வாறு தேவாரத்தைக் கூர்ந்து படித்த சேக்கிழார் பெருமான் சுந்தரர் வரலாற்றை எழுதும்போது அவரைச் சிந்தை சிவமாக ஐம்புலன் அடக்கி வாழ்ந்த அறிஞராகவே காட்டியிருக்கிருர். ஆரூரரது உண்மையான தன்மையை யறிய அவரது பழைய வரலாற்றையும் சேக்கிழார் பெருமான் எழுதிய ஆரூரர் வரலாற்றையும் விரிந்த குற்றமற்ற நெஞ்சத்தோடு படித்தறிய வேண்டியது தேவையாகும்.

2. ஆரூரர்க்குப் பெண்கள் தொடர்பு இருந்ததெல்லாம் அவர் வரலாற்றிற் கண்டபடி இரண்டு ஆண்டுகள் தான். 16-வது ஆண்டில் பெற்ருேர் அவர்க்கு மணவினை ஏற்படுத்தினர்கள். 18-வது ஆண்டில் அவர் கைலை சேர்ந்தார். இவ்விரண்டு ஆண்டுகளுக்கிடையே அவர் பல திருவூர்களைக்காணக் கீழ்க்கடற்கரையிலிருந்து மேற்கடற்கரைவரைக்கும் காளத்தியிலிருந்து திருநெல்வேலி வரைக்கும் பலதடவை சுற்றி வந்திருக்கிருர். எப்பொழுதும் பல அடியார்கள் சூழ இருந்தார். அதனுல் அவர், தனித்துப் பெண்களோடு கூடிவாழ்ந்த நாட்கள் சிலவே எனலாம்.சுந்தரர் ஆய்ந்த கிளைபெல்லாம் பூசித்த பூவென நெருங்கிப் பழகின பரவை நாச்சியார் எண்ணுவாரானுல் அவர் நெஞ்சம் பெண்ணிடத்திலா அல்லது பெண்ணை ஒரு பாகத் திருத்திய பெருமானிடத்திலா பதிந்திருந்தது? ஆகையால் பெண்ணுடனிருந்து யோகுசெய்யும் பெருமானைப் போன்று சுந்தரர் இருந்தனர் என்பதற்கு ஐயம் இல்லை.

3. இதனை, அவருடைய வரலாற்றை ஆராய்ந்து தெரிந்து கொள்ளலாம். ஆரூரர்க்கு மணப்பருவம் (16 ஆண்டு) எட்டியதும் ஒரு பெண்ணைத் தம்மரபிலேயே கொள்ளப்பெற்ருேர் ஏற்பாடு செய்தனர். மணந் தொடங்குகையில் சிவபெருமான், தாம்முன் ஆரூரர்க்கு அளித்த சொல்லை நிறைவேற்ற மணப்பந்தர்க்கு வந்து வழக்காடித் தடுத்தாட்கொண்டார்.

அதனால் மரபிற்குரிய வினைகளோடு கூடிய மணம் அவர்க்கு அன்றும் நடைபெறவில்லை. பின்னாளில் அவர் ஆரூரை அடைந்திருந்தபோது சிவபெருமான் கணிகைப் பெண்ணாகிய பரவை நாச்சியாரை அருள, அவரை மனைவியாகக் கொண்டார். அதற்குப் பின் திருவொற்றியூரில் கோயில் கொண்ட எழுத்தறியும் பெருமானைக் காணச் சென்றபோது அங்கே நோன்பியர் வடிவுடன் இருந்த (நூல்போன) வேளாளப் பெண்மணியாகிய சங்கிலி நாச்சியாரைக் கண்டார்; கண்டதும் தம் நெஞ்சு அவர்பால் பண்டைவினையால் செல்வதைத் தடுக்க ஆற்றாதவராக நின்றார். எல்லாம் வல்ல இறைவனே முன்னின்று இம்மணத்தையும் முடித்தனர். இவ்விரண்டு காதற் கிழத்தியர்களைத் தவிர மற்ற எந்தப் பெண்களிடத்திலாவது அவர் தம் நெஞ்சத்தை நெகிழவிட்டதாகிய வரலாறு இல்லை. ஊழ்வினையால் (தென்னாடு செய்த நோன்பால்) முற்பிறப்பில் நடந்தேறிய ஒரு செய்கையின் பயனாக அவர் இவ்விருவர்பால் மனம் வைக்க நேர்ந்த தென்பதை அன்புக் கடலாகிய சேக்கிழார் பெருமான் மிக நயமாகத் தமது புராணத்தில் எடுத்துக் கூறுகின்றார். ஆதலால் எப் பெண்கள் பாலும் மனதை எளிதில் போக்கிவிடக்கூடிய உறுதியில்லாதவர் என்று இவரை நினைக்கலாகாது.

4. இம்முடிபை வலியுறுத்த இவர் வரலாற்றிற் சில பகுதிகளையும் இவர் பாடல்களையும் ஆராயலாம். ஆரூரர் திருவாரூரில் பரவைநாச்சியாரோடு வாழ்ந்து கொண்டு இருந்த நாளில் ஒரு முறை கோட்புலி நாயனார் ஊராகிய திருநாட்டியத்தான் குடிக்குச் சென்றனர். அங்கு கோட்புலியார் நம்பியை வரவேற்றுவணங்கி,உணவளித்துத் தம்மிருபெண்களாகிய வனப்பகை சிங்கடியை மணந்து கொள்ளும் படியாக வேண்டிக் கொண்டார். ஆரூரரோ இளங்காளை. பெண்களோ கட்டழகும் இளமையும் நிறைந்து கண்களைக் கவரும்படி

இருந்தனர். எவர்பாலும் விடுத்து மயங்கும் இளகியநெஞ்சின ராய் இருந்திருப்பரேல் அவர் வலியவந்த இரண்டு பெண்ண முதங்களை வேண்டாம் என்று மறுப்பரோ? அவர் இயற்கை யில் பெண்ணிடத்தில் தோன்றும் காமப்பற்றுஅற்றவர் என் பது இதனாலே நன்ருகத் தெரிகிறது. அவர் அப்பெண்களை மணக்காமல் மக்களாகக் கொண்டார். இது வெறுங் கதை யன்று என்பது இவர் பாடிய பாடல்களின் திருக்கடைப் காப்பில் தம்மைச் சிங்கடியப்பன் (15, 27, 37, 47, 57, 68, 70, 98,) என்றும், வனப்பகையப்பன் (12, 29, 30, 33, 34, 42, 44, 57, 68, 87,) என்றும் கூறுவதினால் அறியலாம்.

5. இவர் தம் பாடல்களில் பெண்களைப்பற்றிப் பேசு வதை மூன்றுவகைப்படுத்தலாகும். 1. தமக்கு உரிமையான பரவை சங்கிலியாரைப்பற்றிப்பேசல் 2. கோவில்களிலும் ஊர் களிலும் மகளிர் ஆடிப்பாடிக் களிகூர்வதைப் பற்றி விரித்தல் 3. பெண்களால் தமக்குண்டான துன்பங்களையும் அவர்பால் கண்ட இன்பம் நிலையாமையையும் குறித்தலுமாம்.

6. சங்கிலி பரவையார். இருவரும் தம்மால் காதலிக்கப் பட்டபெண்பாலார் என்பதுயாவரும்அறிந்தது. அவர்கள்சிவ பெருமான் முன்னிற்கக் கிடைத்தவர்களாதலால் இவர் அவர் களைப்பற்றித் தாம் கடவுள் மேல் பாடிய பாடல்களில் குறிப் பதற்கு அஞ்சினரில்லை. மேலும் உடைமையும் உடலும் ஆவி யும் எல்லாம் சிவபெருமானல் தரப்பட்டன என்ற உண்மை யான நம்பிக்கை உடையவர் அன்ரே ஆளுடைய நம்பி. சிவ பெருமான் தந்த பொருள்களை அவருடைய பாட்டுக்களில் குறிப்பதில் என்ன குற்றம்?

ஆரூரர் இரு மனைவியரிடத்தும் உடலும் உயிரும் போல ஒழுகினர். தம் வாழ்க்கையில் எந்த வழியிலும் அவர்களைக் கைவிடவில்லை. தம் செய்கைகள்பலவும்அவர்கள் பொருட்டே என்பதை அவர் பாடல்கள் விளக்கும். 51ல் 'மாழையொண்

கண் பரவையைத் தந்தாண்டானை' என்பதால் பரவையாரைச் சிவபெருமானால் அடைந்ததென்பது தெரிகிறது. 20ம் பத்தில் உமையை இடப்பக்கத்துஅமர்த்திய கோளிலிப் பெருமானைக் குண்டையூர்பெற்ற நெல்லை திருவாரூர்ப்பரவையார் மனைக்குக் கொண்டுவர விரும்பி ஆள்கேட்கையில் தம்வேண்டுகோள் பரவையின் பொருட்டு என்பதை நன்கு தெரிவிக்கிறார். "வாளன கண்மடவாள் அவள் வாடிவருந்தாமே, மாதர் நல்லார் வருத்த மது நீயுமறிதியன்றே, பரவைபசி வருத்தம் நீயும் அறிதியன்றே, பரக்கு மரவல்குலாள் பரவையவள்வாடுகின்றாள்" என்ற தொடர்களை ஆராய்ந்து பார்க்கவும். திருமுதுகுன்றப் பதிகத்தில் (25) செம்பொன்னைப் பரவையார் வீட்டில் கொண்டு வந்து தந்தருள வேண்டினார். "மின்செய்த நுண்ணிடையாள் பரவை யிவள் தன்முகப்பே, வம்பமரும் குழலாள் பரவையிவள் வாடுகின்றாள், மைந்தாருந் தடங்கண் பரவையிவள் வாடாமே தந்தருளாய், கொங்கை நல்லாள் பரவை குணங் கொண்டிருந்தாள் முகப்பே, பையாரும்மர வல்குலாளிவள் வாடுகின்றாள், படியாரும் இயலாள் பரவை யிவள் தன் முகப்பே....தந்தருளாய், பூத்தாரும் குழலாள் பரவையிவள் தன்முகப்பே..........தந்தருளாய் என்ற குறிப்புகள் மேற் சொன்னதை வலியுறுத்தும். இம்மேற்கோள்களுள் பரவையிடத்துள்ள தமது அன்பையும் அவ்வம்மையின் மிகுந்த அழகினையும் அழகுபெற எடுத்துரைத்தார். இப்படிபரமனை வேண்டினபோது பரவையாரும் பக்கத்தில் இருந்தனர் என்பது 'இவள்' என்ற சுட்டுப் பெயரால் தெரிகிறது.

இவ்வாறே சங்கிலியாருடைய தொடர்பையும் குறிக்கின்றார். சங்கிலியார் தமக்குச் சிவபெருமானால் கிடைத்தனர் என்பதை "51ம் பதிகத்தில் சங்கிலியோ டெனைப்புணர்த்த தத்துவனை" என்ற திருப்பாட்டாலும், அப்பேறு திருவொற்றியில் கிடைத்ததென்பதை 45ல்கண்ட "திருவொற்றியூர்

புக்குச் சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்றோள் தட முலை'' எனும் குறிப்பாலும், சங்கிலியாரிடத்தில் பேரன்புள்ள வர் என்பதைக் காதற்சங்கிலி(54) என்ற மொழியாலும் அவ் வம்மையாரால் நல்ல பயன்களை முதல் முதல் அடைந்தனர் என்பதை (89) "மான்றிகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்க ளெல்லாம், தோன்றவருள் செய்தளித்தாய்'' என்ற உரை யாலும் அறியக் கிடக்கிறது. தமக்குச் சங்கிலி காரணமாகத் துன்பமும் உண்டாயிற்று என்பதை 69-ல் "சங்கிலிக்கா வென்கண் கொண்ட பண்ப'' என்ற பாடலில் தெரிவிக்கிறார்.

7. ஆரூரர் நாளில் கோவில்களில் ஆடல்பாடல்கள் எப் பொழுதும் நடந்தன போலும். அவர் தாம் சென்ற பல ஊரின்கண்ணும் மகளிர்கள் மிக அழகாக ஆடுவதையும் இனி மையாகப் பாடுவதையும் கண்ணுற்று அக்காட்சிகளைத் தம் பாடல்களில் வரைந்திட்டார். அந்நாளில் மகளிர் கூச்சம் கொள் ளாமல் கோவில்களில் திருநெறிவளர்க்கும் ஆடல்களைச் செய்து கடவுளை வணங்கியும், அன்பர்கள் அகத்தைச் சிவத்தில் ஈடுபடச் செய்தும் வந்தனர். அவர்கள் பாடல் ஆடலில் மிகத் தேர்ச்சியுற்றனர் என்பதும் தெரியக் கிடக்கின்றது. ஆரூரர் அம்மகளிர் இயல்பையும் ஆடல்பாடல் திறங்களையும் எடுத் துக் காட்டுகையில் உள்ளதை உள்ளவாறு பேசுகிறார். திருத் துறையூர்ப் பதிகத்தில் (13) கலையாரல்குற் கன்னியர் ஆடும் துறையூர், கரும்பார் மொழிக் கன்னியாடும் துறையூர், மையார் தடங்கண்ணியர் ஆடுந் துறையூர்'' என அவர்கள் ஆட்டத்தை வியந்தார். மாதர்கள் கண்ணில் மைதீட்டியிருந் தனர் என்பது மேற்குறித்த அடி ஒன்றால் தெரிகிறது. கருமையிடுதலை இரண்டு காரணமாக முன்னாளில் செய்தனர் போலத் தோன்றுகிறது: ஒன்று பார்ப்பவர்க்கு அழகு பெறத் தோன்றல்; மற்றொன்று கண்ணிற்கு நன்மை யுண் டாக்கல். இக்காலத்தில் இதை மகளிர் தவிர்த்ததால் பலர்

கண்ணேப் அடைந்து கண்ணுடியின் உதவி நாடி நிற்பது வருந்தத்தக்கது.

திருப்பூவணத்தில் மகளிர் பலர் சேர்ந்து பாடுவதை (11) "பண்ணிசையார் மொழியார் பலர் பாட....உறை பூவணம்" என்ற பாடலில் கூறுகிறூர். பாச்சிலாச்சிராமத்தைப் பாடுங்கால் 'பையரவல்குற்பாவையராடும் பாச்சில்' (14) எனப் பல பெண்கள் சேர்ந்து ஆடுவதைச் சொன்னூர். பைஞ்ஞீலிப் பத்தில் (36) மின்னும் நுண்ணிடை மங்கைமார் பலர் வேண்டிக் காதல் மொழிந்த சொல் என்கிறூர். இதன் பொருள் தெளிவாகத் தெரியவில்லை. கோவிலில் வணங்க வந்த மங்கைமார் ஆரூரரைப் பைஞ்ஞீலிப் பெருமானைப் பாடவேண்டும் என்று வேண்டினதினுல் பாடினூர் என்பதை ஒருக்கால் குறிக்கின்றதோ? வெஞ்சமாக்கூடற் பதிகத்தில் (42) "பாடல் முழவும் குழலுமியம்பப் பணைத்தோளிர் பாடலோடாடல் அருக் கூடல்" என அவ்வூரில் முழவு குழல் முதலிய இசைக் கருவிகள் துணைக்கொண்டும் பாடலை மேற்கொண்டும் மங்கையர் ஆடுவதைக் குறிக்கின்றூர். அப்படியே திருமுல்லைவாயிலில் (69) "மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரிய வார்குழல் மாமயிற் சாயல், அணிகெழு கொங்கை யங்கயற் கண்ணூர் அருநடமாடலறுது" என்கின்றூர். இக்காட்சியை இன்றும் அவ்வூரில் திருவிழாக் காலத்தில் காணலாம்.

8. மகளிர் நீரில் விளையாடுவதைப் பல பாடல்களில் குறித்தார். (40) கானூட்டு முள்ளூரில் "தையல் மடவார்கள் உடையவிழக் குழலவிழக் கோதை குடைந்தாடக் குங்குமங்களுந்தி வருங் கொள்ளிடம்" என மகளிர் நீராடுந் தன்மையைப் படமெடுத்தாற்போல் வரைந்தார். அவ்விதமே நீர்விளையாட்டைப் பாண்டிக் கொடுமுடிப் பதிகத்தில் (48) 'பஞ்சின் மெல்லடிப் பாவைமார் குடைந்தாடும், குரும்பை மென்முலைக் கோதைமார் குடைந்தாடும் கொடுமுடி" என்று விரித்துரைத்

தார். துறையூர்ப்பதிகத்திலும் நீர் விளையாட்டு கூறப்படுகின்றது. இதனால் என்ன தெரிகிறதென்றால் அந்நாளில் எந்நாட்டிலும் மகளிர் குளங்களிலும் ஆறுகளிலும் நன்கு மூழ்கி அச்சமற்று ஆடிக்களித்தனர் என்பது. இற்றைநாள் பட்டினங்களில் தூம்பிற் கொள்ளும் நீரினைச் சிறு செம்புகளால் மொண்டு உடம்பின்மேல் சிறிது சிறிதாக ஊற்றிக் கொள்ளும் வலிவற்ற மகளிர் இந்நீர் விளையாட்டைக் கனவிலும் அறிவரோ?

சுந்தரர், பெண்கள் இயல்பை நன்றாக அறிந்தவர்; அகத்துறை அழகுகளையும் கற்று வல்லவராயிருந்தார். "செந்தமிழ்த் துறைவல்லீரோ" (36) என்று வினவியபோது ஆரூரர் அகத் தமிழை நன்கு சுவைத்துத்தான் இவ்விதம் சொன்னார் போலும். மகளிர் துனிவும் இனிமை தரும் என்பதை (40) 'துனிவினிய தூயமொழித் தொண்டைவாய் நல்லார்' என்னும் தொடரால் குறித்தார். காதலர்பால் மனதைச் செலுத்திய மங்கைமார் என்னநிலை யடைகிறார் என்பதைத் திருவாரூர்ப் பதிகத்தில் (37) தலைவி தலைவனிடம் தூது செலுத்து முறையில் சொல்லுகிறார். வளைகணில்லாமையும், கலைகள் சோர்கின்றமையும், காமத்திக் கனன்று எரிந்து மெய்யை உண்கின்றமையும், மற்றைய உறுப்புகள் நிறம் மாறுதல் அடைகின்றமையும் அப்பதிகத்தில் குறிக்கப்படுகின்றன.

9. மேலே சொன்னவைகள் செழித்த நாட்டில் வாழும் பாங்குடைய (Civilised) பெண்களைப் பற்றியன. ஆரூரர் காட்டிலும் மலையிலும் வாழும் பெண்களையும் பார்த்திருக்கின்றார். அவர்களுடைய அழகையும் செய்கைகளையும் கூட தேவாரத்தில் விரித்துரைத்திருக்கின்றார். சீபருப்பதத்தை (79)ப்பாடும் பொழுது குறமகளிர் கவண் எறியும் விதத்தையும் கிளி ஓச்சுவதையும் நன்றாக வரைந்திருக்கிறார்.

மன்னிப் புனங்காவன் மடமொழியார் புனங்காக்கக்
கன்னிக்கிளிவந்துகவைக் கோலிக்கதிர் கொய்ய
என்னைக்கிளி மதியா தென்று எடுத்துக்கவணொலிப்பத்
தென்னற் கிளிதிரிந்தேறிய சீபர்ப்பத மலையே.

மையார் தடங்கண்ணாள் மடமொழியாள் புனம்காக்கச்
செவ்வேதிரிந் தாயோவெனப் போகாவிட விளிந்து
கைபாவிய கவணான்மணியெறிய விரிந்தோடிச்
செவ்வாயினகிளி பாடிடுஞ்சீபர்ப்பத மலையே.

என்னும் திருபாட்டுக்கள் நோக்கத்தக்கன. இவைகள் பெண்கள் கவணில் மணியைவைத்து எறிவதைக் காட்டும். இனி அவர்கள் தினையைக் கொய்யவரும் கிளிகளொடு பேசுவது எப்படி என்பதை,

அப்போது வந்துண்டீர்களுக் கழையாது முன்னிருந்தேன்
எப்போதும் வந்துண்டால் எமைஎமர்கள் பழியாரோ
இப்போது மக்கிதுவே தொழில் என்றோடியக்கிளியைச்
செப்பேந்திள முலையாள் எறிசீபர்ப்பத மலையே.

எனும் பாடலில் விரித்தனர்.

பெண்களின் ஒவ்வொரு உறுப்பினழகையும் ஆங்காங்கு தீட்டிவைத்தார். 82-ல் "கொவ்வைத்துவர்வாயார் குடைந்தாடும் திருச்சுழியல்" என மகளிர் வாயினிறத்தையும், 91ல் "கலவ மயில்போல் வளைக்கை நல்லார் பலரும் பரவும் பவளப் படியான்" என அவர் தோற்றத்தையும், 93-ல் "முகிழ் மென்முலையார் முகமே கமலமதிகழுந்துறையூர் என்று அவர்கள் முகத்தின் அழகையும் மிக நேர்த்தியாக விரித்தார்.

10. மேற் சொன்னவாறு ஆரூரர் பெண்கள் உடனலத்தையும் செயல்களையும் கண்டவாறு எழுதினாலும் பெண்களுடன் நெருங்கி நின்று உறவாடினால் கெடுதல்களும் உண்டாகும் என்பதையும் ஒரு சில பாடல்களில் தெரிவிக்கின்றார்; அவர்கள் உறவை வெறுக்கின்றார். (4ல்) திருவஞ்சைக் களத்

தில் "வெறுத்தேன் மனைவாழ்க்கையை விட்டொழிந்தேன்" எனப்பரவையோடு மகிழ்ந்திருந்த வாழ்வைமறந்து துறந்தவராகப் பேசுகின்றார்: அவர் தம் இருமனைவியர்கள் காரணமாகப் பட்டபாட்டின் பயனாக 3-ம் பதிகத்தில் "வாணுர் நுதலால் வலைப்பட்டடியேன் பலவின்கனி யீந்தது போல் வதன் முன் - போவதோர் சூழல் சொல்லே" என்றும், 52-ல் "மறிசேர் ஒண்கண்மட நல்லார் வலையிற்பட்டு மதிமயங்கி அறிவே யழிந்தேனையா நான்" என்றும் தாம் பெண்கள் காரணமாகச் சில வேளை அறிவழிந்ததாகவும் கூறுகின்றார். இங்கே தாம் கடவுளைப் பரவைபால் தூது அனுப்பிய செய்கையையும் சங்கிலியார்க்குச் சூளுறவு செய்து தப்பியதையும் மனத்தில் கொண்டு இவ்வாறு சொன்னாரோ என்னவோ தெரியவில்லை. தாம் சூளுறவு தப்பிக் கண்ணிழந்ததைக்கண்டு பெண்கள் நகைப்பரே என்பதை நினைத்து மனம் வருத்தமடைகிறார். 54ல் "அகத்தில் பெண்கள் நான் ஒன்று சொன்னால் அழையேற் போகுருடா எனத் தரியேன்" என்ற குறிப்பு ஆடவர்களை மதியாது நடந்த பெண்களும் அந்நாளில் இருந்திருப்பர்கொல் என்னும் ஐயத்தைக் கிளப்புகிறது.

ஆரூரர் தம்மைப் பெண்கள்வலையினின்றும் தப்புவிக்க வேண்டுமென்று கடவுளை வேண்டுகின்றார். அதற்கு வேண்டிய வழிகளையும் தேட விரும்புகிறார். 7-ம் பதிகத்தில் "வடிகொள் கண்ணார் வஞ்சனை யுட்பட்டு மயங்காதே....... எதிர் கொள்பாடி யடைவோமே" என்றார். ஒற்றி நகராரை "மானை நோக்கியர் கண் வலைப்பட்டு வருந்தி யானுற்ற வல்வினைக்கஞ்சி நாளும் இத்தனை வேண்டுவது ஒற்றியூர் எனும் ஊருறைவானே" (54) என்று பாடினர். 60-ல் "ஏழை மானுட இன்பினை நோக்கி இளையவர் வலைப்பட்டிருந்தின்னம் வஞ்ச வல்வினையுள் வலைப்பட்டு........அறியாத ஏழையேனுக்கு உய்வகை யருளாய்" என்றும் தம்மைப் பெண்கள் மயக்கத்திலி

ருந்து உய்விக்க வேண்டுகிறார். (64) திருத்தினை நகர்ப்பத்தில் "வடிகொள் கண்ணிணை மடந்தை மார்தம்பான் மயலதுற்றுவஞ்சனைக் கிடமாகிமுடியுமா கருதேல்" எனத் தம் நெஞ்சிற்கு அறிவுறுத்துகிறார். கடைசிப் பதிகத்தில் (100) "மடவார் தங்கள் வல்வினைப் பட்டாழ முகந்த வென்னை அதுமாற்றி.......அருள் புரிந்தான்" என்று சிவ பெருமான் பெண்களிடத்தினின்று தம்மை மீட்டதைக் குறிக்கின்றார்.

# தேன் கூடு

[மயிலைக்கிழார் இளமுருகனார்]

## குறும்பும் கூர்மையும்

பிஷப் வெல்டன் என்பவர் பதின்மூன்று வருஷம் (1885—1898) ஹாரோ (Harrow) பப்ளிக் பள்ளிக்கூடத் தலைமையாசிரியராக இருந்த போது, மூல புருஷர் தினக் கொண்டாட்டமொன்று முடிந்து தாம் வண்டி யேறிச் செல்ல, பால்ட்வின் சர்ச்சில் ஆமெரி என்ற மூன்று குறும்புப் பிள்ளைகள் தாவிக் குதித்து வண்டியின் பின்புறத்தில் ஏறிச்சென்றார்கள். இம்மூன்று மாணவர்களும் பிறகு பாராளுமன்றத்தில் சிறந்த மந்திரிகளானார்கள்.

* * *

## கோவணத்தார்

தமிழ் நாட்டில் நரித்தொம்பர்கள் என்ற ஒரு வகுப்பினர் உள்ளார். இவர்கள் கோவணமும் தலைக்கட்டும் உள்ளவர்கள். இடுப்பில் கோவணந் தவிர வேறு துணி கட்டினால் இவர்களுடைய பஞ்சாயத்தில் விசாரணை நடந்து ரூ. 12 அபராதமோ அல்லது சாதி பிரஷ்டமோ விதிக்கப்படும். இவ்

விருபதாம் நூற்றாண்டிலும் இத்தகைய கட்டுப்பாடுகள் பிழைத்திருக்கின்றன.

*   *   *

## கலியாணம் எப்பொழுது?

பிரான்சு தேசத்துப் பிரதம மந்திரியாயிருந்து சமீபத்தில் விலகிய பிளம் (Blum) என்ற அறிஞர் கலியாணத்தைப்பற்றி ஓராராய்ச்சி செய்து, ஆணும் பெண்ணும் சலிக்கும் வரையில் இஷ்டம்போல் புணர்ச்சி செய்த பிறகே புருஷனும் பெண்சாதியுமாகக் கட்டுப்பட்டுக் கலியாணம் செய்துகொள்வது நலமென்று கூறுகிறார்.

*   *   *

## மநுநீதிச் சோழன் மறுதோற்றமா?

நியூஹெப்ரிடீஸ் (New Hebrides) தீவுகளில் ஒன்றாகிய நிகுனுவிலுள்ள அரசனது குமாரன் தனது தந்தையிடமிருந்த துப்பாக்கியை ஒருவருமறியாதபடி எடுத்துக்கொண்டு வெறிபிடித்துத் தன் இனத்தவர் நால்வரையும் ரெவரண்ட் வில்லியம் மில்ன் என்ற பாதிரியாரையும் கொன்றான். இச்செய்தியைக் கேட்ட அரசன் நடுநிலையில் ஒருசிறிதும் பிறழாது உடனே ஏவலாளரை யனுப்பித் தனது மகனைக் கொன்று நீதிசெலுத்தினன். பணக்காரரும் உத்தியோகச் சார்புடையவரும் பிழை செய்தால், அப்பிழையை மறைத்துக் குழப்பிவிடுவது நாகரிகமுதிர்ச்சி யென்று கருதப்படும் இந்நாளில் இவ்வரசனை மநுநீதிச் சோழன் மறுதோற்றமெனக் கூறுதல் மிகையாகுமா?

# மாணவன் மன நிகழ்ச்சி

(G. கலியாணம், B.A., Dip. Econ.)

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடாத்தும் பண்டித பரீட்சையின் வினுத்தாள்களை ஒருக்கால் பார்க்க நேர்ந்தது. அவைகளில் ஒரு கேள்வி என் கவனத்தை ஈர்த்தது. அதாவது "திங்களும் ஞாயிறும் திகழுமோர் மாலையில் ஆற்றிடைக் குறைமணல் வீற்றிருக்கும் ஒரு மாணவன் மனதின் நினைவுறு நிகழ்ச்சியை ஒரு சிறு கட்டுரையாக வரைய வேண்டும்" என்பதே. அதனையே பொருளாகக் கொண்டு இக்கட்டுரையை எழுதத் துணிகின்றேன்.

மாணவன் ஒருவன் காவிரி ஆற்றிடைக் குறைமணலில் அமர்ந்து பின்வருமாறு சிந்திக்கிறான் :—இளங்கோவடிகள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயர் காப்பியமாம் சிலப்பதிகாரத்தை யருளினர். அந்நூற்றொடக்கத்தே தெய்வ வணக்கம் எவ்வாறு கூறியிருக்கின்றனர் என்பது எனக்கு ஈண்டு நினைவிற்கு வருகிறது.

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார் சென்னி குளிர்வெண்குடை போன்றிவ்
வங்கணுலகளித்தலான்,
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரிநாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேருவலந்திரிதலான்,
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலியுலகிற் கவனளிபோன்
மேனின்று தான் சுரத்தலான்."

இவ்வடிகளில் உலகிற்கு இன்றியமையாத சந்திரன், சூரியன், மழை இவைகளுக்கே வணக்கம் கூறியிருக்கின்ற

னர். [சூரியன் மறைவதைக் காண்கிறுன்] ஓ! வெய்யவனே! நீ மேற்றிசைக் கடலுள் ஆழ்கின்றனையோ! நீ செயும் கொடுமைக்கு இதுவே தகும். உன் வெம்மை பொறுக்க லாற்ருது சீவராசிகள் வருந்துகின்றனவே. வெயில் தாக்கால் (Sun-stroke) சிலர் இறந்து போகின்றனர் என்று சொல்கின்றனரே. வெய்யவன் என்ற பெயர் உனக்கிட்டிருப்பது நேரிதே. உன் நிலைமையை நினைக்கிலோ நகைப்பிற் கிடனுகின்றது. உன் தேரை ஓட்டுபவனே அருணன் என்னும் முடவன்; ஊர்ந்து செல்லும் நீயோ பல் இல்லாதவன்; செல்லும் பாட்டையோ அந்தரம்; உன் தேருக்கோ சக்கரம் ஒன்று தான்; ஆனுல் குதிரைகளோ ஏழு; அவைகளும் பச்சை நிறம். இவ்வாறிருக்கும் பொழுதே உலக சீவராசிகளைத் தகிக்கின்றனையே! நல்ல நிலைமையில் இருந்து விட்டாலோ சொல்ல வேண்டுவதில்லை. அதோ உனக்கு எதிராகக் கீழ்த் திசையில் தோன்றும் சந்திரனைப் பார். அவன் தண்ணொளி பரப்பி விண்ணில் தயங்கும் தன்மைதான் என்னே! எங்கள் அப்பரடிகள்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே."

என்ற திருப்பாட்டில் அவனை ஈசன் கழலிணைக்கு ஒப்பிட்டிருப்பது என் நினைவின் முன் வந்து நிற்கின்றது. சரண் புகுந்த சந்திரனை எங்கள் சிவபெருமான் தமை வந்தடைந் தோரைக் காத்தல் தலையாயவர் தங்கடன் என்றபடி சடாபாரத்தின் மேற் கொண்டனர். எங்கள் இராமலிங்க அடிகள்,

"தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே - ஒரு
தந்திர நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே

சச்சிதானந்தக் கடலில் வெண்ணிலாவே - நானும்
தாழ்ந்து விழ வேண்டுகின்றேன் வெண்ணிலாவே
இராப்பகலில்லா விடத்தே வெண்ணிலாவே - நானும்
இருக்க வெண்ணி வாடுகின்றேன் வெண்ணிலாவே"

என்றருளியிருக்கின்றனர். ஆகா!பாட்டின் அமைப்பும் அதன் உட் பொருளும் என்ன விழுமியன! தன்னைத்தானறிந்து மகிழ ஒரு தந்திரம் வேண்டுமாம்; ஆனந்தக் கடலுள் ஆழ வேண்டுமாம்; இராப்பகலில்லாவிடத்து இருக்க வேண்டுமாம். இவை யெல்லாம் யாருக்குக் கிடைக்கும்! ஏ! முழு மதியே! உன் உருவத்தைப் பார்த்தவுடன் அலைகடலும் பொங்கி யெழுகின்றதே. என்னே உன்னுடைய மகிமை! என்னே என்னுடைய நடு நிலைமை! சூரியனை வைதேன்; உன்மேல் புகழ் மொழி பெய்தேன். நன்று! நன்று! நீ பகலவனிட மிருந்தன்றோ ஒளியைப் பெறுகின்றாய். நீ கடன் வாங்கிக் கொண்டு வெளிக்கு இடம்பமாக வாழ்கின்றவரைப் போன்றவனல்லவா? நாள்தோறும் தேய்ந்து போகின்றனை. உன்னிடைக் களங்க மிருக்கின்றது. ஆனால் உன்னை வரையாது கொடுக்கும் வள்ளலுக்கு ஒப்பிட்டிருக்கின்றனர்.

"தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற் பார் விழுமியோர் - திங்கள்
கறையிருளை நீக்கக் கருதாது உலகில்
நிறையிருளை நீக்குமேல் நின்று"

என்று கூறி யிருக்கின்றனரே! என்ன நான் எண்ணுவதெல்லாம் ஒன்றுக்கொன்று பொருந்தாததா யிருக்கின்றதே! சூரிய வெப்பமில்லையேல் உலகத்தில் என்ன நடக்கும்? செடி கொடிகட்கு உயிர் கொடுப்பவன் அவனேயன்றோ! கடவுள் நமக்குக் கண்களைக் கொடுத்திருந்தாலும் அவன் ஒளியில்லையேல் நம் கண்களின் பயன் என்னவாகும்? இரவியே யான்

உன்னை இகழ்ந்ததற்கு மன்னிப்பாயாக. [நீரோட்டத்தைக் காண்கிறான்.]

கவினுற விளங்கும் காவிரியே! யாங்கள் உன்னால் அடையும் பயன் எத்தன்மைத்து! "தண்ணீரும் காவிரியே" என்று புகழப்பட்டிருக்கின்றனையே! "கொண்டல் குமுறும் குடகு இழிந்து மதகு உந்தி, அகில் கொண்டு, நுரை தெண்டி வரு நீர்த்திரைகளில் தாளமும் கனகமும் சிதறுவதும், தன்னில் நீராடியவர்க்கும், தன் கரைகளில் வாழ்பவர்க்கும் மாத்திரமேயன்றி தன் நீரில் பட்ட காற்று செல்லுமிடம் அவ்வளவிலும் உள்ளார்க்கும் முத்திதரவல்ல பொன்னிமா நதி" என்று உன்னைப் போற்றியிருப்பது பொருந்தும்; பலவகையிலும் பொருந்தும். உன் பாங்கர் பாடல் பெற்ற பதிகள் பல திகழ்கின்றனவே. அந்தோ! உன்தூயநீரில் பல நகரங்களின் சாக்கடைகள் வந்து வீழ்வதை ஒருபுறம் எண்ணினால் நெஞ்சம் பொறுக்கவில்லையே! என் செய்வது! இது காலத்தின் கோலம்!

முன்னுக்குப் பின் முரண்படுமாறு பல எண்ணங்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றேனே. சூரியனை இகழ்ந்தேன்; சந்திரனைப் புகழ்ந்தேன். பிறகு சந்திரனை இகழ்ந்தேன்; சூரியனைப் புகழ்ந்தேன். பின்னர் காவிரியைப் போற்றினேன். எண்ணியவை ஒரு திறப்படாதனவாயினும் அறிந்துகொண்டவை பல. அதிக நாழிகையாய் விட்டது. வெளியே சென்றவன் வீட்டிற்கு இன்னும் வரவில்லை யென்று பெற்றோர் காத்துக்கொண் டிருப்பார்கள். ஆகையால் போகிறேன். (போவதற் கெழுகிறான்; வானில் நாரை கூவுகிறது). நாரையே! உன் குரல் கேட்டதும் சத்திமுற்றப் புலவர் பாடல் என் மனத் தெழுகின்றது. [பாடுகின்றான்].

"நாராய் ! நாராய் ! செங்கால் நாராய் !
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய் செங்கால் நாராய் !
நீயும் நின் மனைவியும் தென்திசைக்குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின்
எம்மூர்ச் சத்திமுற்ற வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரல் பல்லி
பாடுபார்த்திருக்கும் என் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலே தழீஇப்
பேழை யுள்ளிருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழையா ளனைக்கண்டனம் எனுமே"

இப்பாட்டின் நடைப்போக்கும், பொருட்செறிவும் நோக்குழி மகிழ்ச்சி மீக்கூர்கிறது. ஆனால் பாட்டைப் பாடிய பாவலர் வறுமையை நினைக்கில் நெஞ்சம் குமுறுகிறது. வறுமையில்லையேல் இச்செந்தமிழ்ச் செய்யுள் எழுந்திராதே என்று எண்ணியே மனதை ஒருவாறு சமாதானப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இப்புலவர் ஊர் சோழநாட்டில் கும்பகோணத்திற் கருகிலுள்ள சத்திமுற்றம். அதைச் 'சத்திமுத்தம்' என்று பெயரிட்டு அம்பிகை சிவபெருமானை முத்தமிட்ட இடம் என்று ஒரு கதையை அவ்வூரில் கூறுகின்றனரே. இருப்புப்பாதை நிலயத்தார் தான் தலப்பெயர்களைக் குலைக்கிறார்கள் என்றால் சைவர்கள் என்ற பெயர் படைத்தோரும் அவ்வாறு செய்திருக்கின்றதை எண்ணில் யாது கூறமுடியும்! எங்கள் அப்பரடிகள் இவ்வூர்த் தேவாரத்தில் "சத்திமுற்றம்" என்றே

கூறி யிருப்பதால் "சத்திமுத்தம்" என்ற பெயர் பொருந்தாது என்பதே என் முடிவு [பாடிக்கொண்டே போகிறான்].

"கருவுற்றிருந்துன் கழலே நினைந்தேன் கருப்புவியில்
தெருவிற் புகுந்தேன் திகைத்தடியேன்றன் றிகைப்பொழிவி
உருவிற் றிகழுமுமை யாள்கணவாவிடிற் கெடுவேன்
திருவிற்பொலி சத்திமுற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே"

# சைவ சேனை

[V. வீரசிங்கம், B.A.]

திருப்படை யெழுச்சி யென்னும் திவ்விய பதிகத்தைப் புனைந்துள்ள திருவாசகத்தை வேத மொழியாய்க் கொள்ளும் சைவத் தமிழ் மக்களுக்குச் சைவ சேனை ஓர் புதிய காரியமாயிராது. சைவமும் தமிழும் பள்ளியெழுங் காலமாகிய இவ் வேளையில் திருப்படையெழுச்சிப் பதிகத்தை நாம் மறந்திருப்பினும், எம் மத்தியில் தம் மதத்தை நாட்டவும், மக்கட் கின்பம் பயக்கவு மெழுந்த புறமதப் படைகள் நம்மனோரை விழிக்கச் செய்கின்றன. கிறிஸ்துவ மத ரட்சணிய சேனைவீரர் கிராமந்தோறுஞ் சென்று தம் தொண்டினாலும், உன்னத சீவிய இலக்காலும் கிறிஸ்துவ சமயத்தொண்டாற்றி வருகிறார்கள். "ரோமன்" கத்தோலிக்கக் குருசங்கங்களை நம் தேச முன்னேற்றத்திற்கும், தம் சமய முன்னேற்றத்திற்கும் தொண்டாற்றி வரும் மாபெரும் சேனையென்றே சொல்ல வேண்டும். புத்தகுருமாரின் சங்கங்கள் புத்துயிர் பெற்று இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் பரந்து வருவதை நோக்குமிடத்தும், ஓர் சைவச் சேனையின் அத்தியாவசியகம் சைவ மக்களின் மனத்திற் பதியாதிராது. சைவ

சமயத்தின் உண்மையை அறிவதற்கும், சைவத்தின் மகத்துவப் பேருகிய இம்மையில் முத்தியாம் சித்தியையும், முத்திப் பெரும்பேற்றையும், தாமும் ஏனையோரும் அடைவதற்கும் ஓர் சைவ சேனை பெருந் துணையாகும். ஓர் சேனையில்லாத நாடானது எவ்விதமாய் வலிகுன்றிச் சொற்ப காலத்திலற்றுப் போகிறதோ, அவ்விதமாய்ச் சமயசீவியத்தை நிலைநாட்டவும், சமயத் தொண்டாற்றவும், ஒவ்வோர் சமயமும் சேனையை வகுத்து வைத்திராவிட்டால் சமயநெறியே குன்றிவிடும். தற்காலத்தில் கிறிஸ்தவ சமயத்தைப் பற்றி யாதல், புத்த சமயத்தைப்பற்றி யாதல் சிந்தித்து அவற்றின் பலம் எங்கிருக்கின்றதென்று ஆராய்ந்தால், அச்சமயங்களிற் சேனை போன்று அணிவகுக்கப்பட்டிருக்கும் குருமார் சங்கங்களிலும், அவற்றின் கட்டுப்பாடுகளிலுமே தங்கி யிருக்கின்றது. சைவமும் சிறந்த காலத்து அணிவகுத்திருந்து, அணிகுலைந்த காலத்துக் குன்றப் பெற்றுலும், இன்னமும் உயிர்த்திருப்பது சைவத்தின் பேரருளாலும், பண்டைக் காலத்திற் சைவப் பணியாற்றிய குருஸ்தான ஸ்தாபனங்கள் குற்றுயிராயிருந்தும் இயங்குந் தன்மையாலுமே. சைவக் கலை விளங்க வேண்டுமாயின் சைவ சேனை ஸ்தாபனம் அத்தியாவசியகம்

பரிபூரண சீவியம்

சைவ சேனை யென்ற பெயரைக் கேட்பதுவே சிலருக்குத் திகிலை உண்டுபண்ணிவிடக் கூடியதா யிருக்கும். அச்சம் யாதும் வேண்டாம்! இது ஒரு அழிக்கும் சேனையல்ல. கட்டும் சேனையே. இச்சேனை ஒரு உயிருக்கும் ஹிம்சை செய்யாது, அஹிம்சா தர்மத்தை அனுஷ்டிக்கும் சேனை. சைவ சமயத்தின் நோக்கம் எதுவோ அதுவே இதின் நோக்கம். சிவசமயத்தின் நோக்கம் எல்லா ஆன்மாக்களையும் சிவமயமாக்குதலே. சிவமயத்திற் பரிபூரண சீவியம் விளங்க

வேண்டும். பரிபூரண சீவியம் பிணியற்ற சீவியம். சைவ சமயத்தின் முக்கிய நோக்கம் பிறவிப்பிணி அறுத்தலே என்று சாஸ்திரங்கள் கூறும். வறுமைப் பிணியினாலும் தேகப் பிணியினாலும் பீடிக்கப்பட்ட ஒருவன், பிறவிப் பிணியை அறுக்க முயல்வதென்றால் கஷ்டத்திற் கஷ்டம். பசியினால் வாடிச் சக்தியற் றிருப்பவனுக்கு "சிவ" என்னும் பதத்தின் சக்தியைப் போதிக்க முயல்வது மிக அரிதே. ஏனைய சமயச் சேனைகள் மனுஷ சுபாவத்தின் உண்மை நிலையை யறிந்து வறுமைப் பிணிக்கும் தேகப்பிணிக்கும் வியாகுல மென்னும் பொல்லாப் பிணிக்கும் அடிமைப்பட்டிருக்கும் மானுடரை ஆதரித்துச் சேவை செய்வதில் தம்மத உண்மைகளைப் புகட்டி வருவதை நாமறிவோம். சைவசேனையின் நோக்கங்களும் அவ்வாறே மிடி முதலாய பிணியை நீக்கவும் தடுக்கவும் வேண்டிய வழிகளை ஆராய்ந்து அவ்வழிகளிலே சாதி மத பேதமில்லாமல் எல்லோரையும் போக ஏவுதல் முக்கியமாயிருத்தல்வேண்டும். புண்ணியமானவற்றைச் சிருஷ்டித்தலும், பாவமானவற்றைச் சங்கரித்தலும், புண்ணியம் மேம்பட்ட ஸ்திதியிற் சனசமூகத்தை வைத்திருத்தலுமே சைவ சேனையின் நோக்கம்.

## மணிவாசகர் வகுத்த சேனை

மாணிக்கவாசகப் பெருமான் திருப்படையெழுச்சிப் பதிகத்தில் ஓர் சைவசேனையின் நோக்கத்தையும், அணிவகுப்பையும், படைச்சிறப்பையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். திருப்படையெழுச்சிப் பதிகம் பின் வருமாறு:—

" ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா வேறுமையர் மதிவெண் குடைகவிமின்

ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்காள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே "

" தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்கள்
திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற்படை வாராமே "

இவ்விரு பாடல்களிலு மிருந்து திருப்படையின் நோக்கம் வானவூர் கொள்வதும், கொண்ட அண்டர்நாட்டை ஆள்வதும், மாயமாகிய அஞ்ஞானத்தை ஒழிப்பதும், அவ்வஞ்ஞானத்தினுலுண்டாகும் அல்லல்களை வாராமற் றவிர்ப்பதுமென்று தெளியக் கிடக்கின்றது. மாணிக்கவாசகப் பெருமான் அண்டர்நாடாள்வோ மென்பதில், தாம் மாத்திரமல்ல, எல்லோரும் அப்பூரண சீவியமாகிய முத்திப்பதவியை இம்மையிலே அடைய வேண்டுமென்று கொண்ட மாவாஞ்சை அறியக்கிடக்கின்றது. இறந்த பின் வீடு பேற்றையும் ஈடேற்றத்தையும் பற்றி ஸ்ரீமத். சுவாமி விவேகானந்தரவர்கள் சொன்னதாவது : "நான்பிறப்பிற்கஞ்சேன் ; நான் எத்தனை பிறவி எடுத்தாலும் முத்தியிலும்பார்க்கச் சேவைசெய்வதில் என்னைப் பலியாகக் கொடுக்கவே விரும்புவேன்" என்ற வசனங்களே. நாமெல்லோரும் வானநாடு கொள்வது இறந்த பின்னல்ல, இவ்வுலகத்திலே யிருக்கும் பொழுதுதான். நாம் முத்திநிலை யடைவதல்ல, முத்திநிலையை இப்பூவுலகம் அடையச் செய்ய வேண்டும்.

இவ்வின்பநோக்குக்கிலக்காக மாணிக்கவாசக சுவாமிகள் சேனையில் வாட்படையையல்ல, ஞானப்படையை வேந்தச் சொல்லுகிறுர். ஒரு சேனைக்கு முரசமாகிய பறை தேவையே. அப்பறையாகப் புகழ் நாதம், சிவநாம நாதம், மந்திர நாதம், யோக நாதம் முதலாயுள்ள தொனிபேதங்களே விளங்குகின்

றன. இந்நாதங்களே அச்சேனைக்கு உற்சாகத்தைக் கொடுப்பன. திருப்படையைச் சேர்ந்தவர்கள் எல்லோரையும் மானமா வேறும் என்று கட்டளை செய்வதில், சேனை வீரரெல்லாம் நல்லாருக்கு இலட்சணமாகிய மானத்தை, மரியாதை (Honour) யைக் கடைப்பிடிக்கவேண்டுமென்பது அவர் கருத்து. இவ்விடத்தில் மானமா என்பதற்கு மரியாதையாகிய குதிரை, மனமாகிய குதிரை, உவமையிற் குதிரையாக எண்ணப்படும் வாசி என்ற கருத்துக்கள் கொள்ளக் கிடப்பதும், இரண்டாம் செய்யுளில் பக்தர், தொண்டர், யோகிகளின் அணிகள் வருவதும் கவனிக்கத் தக்கன. மதியென்பதற்கும் தத்துவார்த்தங்கள் பல விருப்பினும், திருப்படையாட்கள் மதிகேடு ஒருபோதும் இல்லாதவராகி, என்றென்றும் புத்தியின் நிழலிலே சரணடைந்தவர்களா யிருத்தல் வேண்டும் என்பதும் ஓர் பொருள். சேர்க்கப்பட்டபடையாட்கள் போர்க்கவசம் பெற்ற பின்னரே சேனையைச் சேர்ந்த பெருமையைக் கண்டு களிப்பார். திருச்சேனைக்கு மாணிக்கவாசகப் பெருமான் தருவது திருநீற்றுக் கவசம். இந்நீற்றுக் கவசம் அங்கமெல்லாம் நீறு பூசிய கவசம் மாத்திரமல்ல, இது உலகத்தை நீற்ற கவசம், தன்னை நீற்ற கவசம், ஆணவமெரிந்த நீற்றுக் கவசம் (Self-Sacrifice). முதற் செய்யுளிலிருந்து சைவசேனையைச் சேரப் பக்குவமுடையவர் யாரென்றால் அறிவும், யுத்தியும், மரியாதையுமுடைய நீற்றுக்கவச முடையோரே. முதற் செய்யுளிற் சேனையைச் சேர வாருங்கள் என்றழைத்து, இரண்டாவது செய்யுளிற் பக்தர்களையும், தொண்டர்களையும், யோகிகளையும், சித்தர்களையும் படைத் துணையாகவும், படையின் அணியாகவும் போகும்படி இரங்கல் எச்சைவனுக்கும் உற்சாகத்தைக் கொடுப்பது மாத்திர மன்றி, அச்சேனையிற் சரியை, கிரியை,

யோகம், ஞானம் என்ற நான்கு படிகளில் நிற்பவருக்கும் இடமுண்டென்பதை விளக்கக் கிடக்கின்றது.

தியாகம்

ஓர் சைவ சேனையானது போர்ச் சேனையின் இலட்சணங்களுட் பலவற்றைக் காலத்துக் கேற்றவிதமாகத் தனக்குள் அமையப் பெற்றதா யிருக்கவேண்டும். தியாகமே எச் சேனைக்கும் அணிகலம். ஒரு போர் வீரன் தன்னுடைய உயிரைத் தன் தேசத்திற்காகப் பலி கொடுக்கிறதற்குப் பின்னில்லான். அவ்வளவு பெரிய தியாகம் சைவ சேனைக்கு அவசரமில்லா திருந்தபோதிலும், அச் சேனையைச் சேர்ந்துள்ள ஒவ்வொருவரும் தியாகஞ் செய்யப் பின்னிற்கக்கூடாது. தம்முடைய சீவனையல்ல, தம்முடைய சீவியத்தைச் சைவ சமயத்திற்குத் தத்தஞ்செய்து கொடுப்பதே சைவச்சேனைவீரர் செய்யக் கூடிய பெருந் தியாகமாகும். எத்தனை கத்தோலிக்க குருமார், எத்தனை புத்த குருமார் இவ்வித தியாகஞ்செய்கிறூர்கள்! அவர்களின் முன்மாதிரி நமது சைவ நன்மக்களைத் தூக்கத்திலிருந்து எழுப்ப வேண்டும். தியாகம் பலதிறப்பட்டது. ஒருவர், சைவ சேனையைச் சேர்ந்த ஒருவரைப் பார்த்துப் பரிகாசம் பண்ணும் பொழுது அதைச் சகித்துக்கொள்வதுந் தியாகமே. ஒரு நேரப் போசனத்தை ஒறுத்து, அந்தச் செலவைச் சைவச் சேனைக்குக் கொடுத்துதவுவதுந் தியாகமே. நேரமில்லாதுபோனாலும், சுகமில்லாது போனாலுங் கூடிய வரையில் நேரத்தை மிச்சம் பிடித்துத் தொண்டு புரிவதும் தியாகமே. இத்தியாகம் நெறி, சாதனை, அடக்கம் (Discipline)என்பவற்றின் பயன். தலைவனுக்குக் கீழ்ப்

படிதல் ஒரு சேனைவீரனின் முக்கிய கடமைகளு ளொன்று கும். கீழ்ப்படிதலில்லாது போனாற் சேனையில்லை. யுத்தக் களரியில், சேனுபதியின் கட்டளைக்காகப் பீரங்கி வாய்முன் னும் மீட்சியற்ற மரணத்துக்கும் தங்களை ஒப்புவித்துத் தங் கள் தேசத்திற்கு வெற்றிகொடுத்த பெரும்வீரருள்ள தேசங்களே சிறந்த பெரிய தேசங்கள். தமிழ்நாட்டின் சீவி யத்தில் இவ்வித அடக்கத்தைச் சைவ சேனை கொடுக்க வேண்டும். சேனைவீரரைப்பற்றி நினைக்கும் பொழுது அவர் கள் பயங்கரமான கொடூர வேலையைச் செய்கிறார்களென்றே கருதுகிறோம். அப்படியல்ல, அவர்கள் காக்குந் தொழிலா கிய பெரிய புண்ணியத்தையே செய்கிறார்கள். சைவச்சேனை யிலுள்ளவர்களும் தமக்கும் மற்றவர்க்கும் வறுமைப்பிணி, தேகப்பிணி, மனப்பிணி, முதலியன வாராமற் காத்து ஓம்பும் அன்பையும் இரக்கத்தையும் பரப்பவேண்டும்.

சைவச்சேனையை உண்டுபண்ணுவதற்கு முதலிற் செய்ய வேண்டிய தென்ன? சைவச்சேனைத் தாபகம் பண்ணவேண் டும்; தளகர்த்தரைப் பழக்கவேண்டும். இவர் அறிவிலுங் குணத்திலுஞ் சிறந்தவராயிருக்கவேண்டும். ஒழுக்கமுடைய வராய்ப் பிரமசாரிகளாயின் அவர்க்குரிய சாதனைகளையும், கிர கஸ்தராயின் அவர்க்குரியவற்றையும், சந்நியாசிகளாயின் அவர்க்குரியவற்றையும் அறிந்து ஒழுகல்வேண்டும். சைவசீவி யம், உயர்தரக் கல்வி, தன் தேகம் பேணல், சுகாதாரசேவை, கூட்டுறவுச் சங்க ஆக்கம், கிராமமுன்னேற்றத்திற்கு உழைத் தல், பரசமய சாதிச் சமாதானம் முதலியவற்றையே இலக் காகக் கொண்டு தளகர்த்தர் பயிற்றப் படல் வேண்டும். இவ ரைப் பழக்குவதற்குப் பணம் வேண்டப்படும். ஆனுல் தள கர்த்தராய் வர விரும்புவோர் தாம் உழைத்து அல்லது

யாசித்தாயினும் தம்மைப் பழக்கிக்கொள்ளவேண்டும். இப் படிச் செய்வதையே முதற்சேவையாகக் கருதவேண்டும். இவ்விதமாகத் தம்மைப் பழக்குவதிற் சித்தியெய்தியவரே தளகர்த்தராவதற்குத் தகுதியுடையவராயிருப்பர். உயர் தரக் கல்வி முதலியவற்றைப் பெற்றும் உத்தியோகம் பெற் றுக்கொள்ளாத வாலிபர் இவ்விதமான தொண்டில் ஈடு படு வது நல்லது. இவ்வித தொண்டு ஒருவனைப் பூரணசீவியம் நடத்த நன்கு பயிற்றிவிடும். பின்பு இவர்கள் உத்தியோகம் பெற்று இனிது வாழ விரும்பினும் அங்ஙனஞ் செய்துகொள் ளலாகும்.

தளகர்த்தரின் கடமைகள் யாவை? ஒவ்வொரு கிராமங் களுக்குஞ் சென்று சேவைச்சேனைப் படையைத் திரட்டல், படிப்பித்தல், உபந்நியாசஞ் செய்தல், வருத்தத்திற்குச் சிகிச்சை செய்தல், சாவீடு மணவீடுகளுக்குச் சென்றுஉதவி புரிதல், கிராமவாசிகளுக்கு ஆலயசேவை செய்யப் பழக்கு தல் முதலியவைகளாம். இவற்றைச் செய்யும்போது சாதி மத துவேஷ புத்தியின்றிச் சேவை செய்ய இவர்கள் நன்கு பயின்றுகொள்ளுதல் அத்தியாவசியமாகும். இங்ஙனமாயின் சொற்ப காலத்திற்றானே. சைவச் சேனை உன்னதநிலையை யடைந்து சைவமும் ஓங்கும். காலகதியில் இச்சேனை தெய்வ அநுக்கிரகம் பெற்றுத் தெய்வச் சேனையாயும் விளங்கும்.

—"இந்து சாதனம்."

திருக்கழுக்குன்றம்

# மலைமருந்துப் பத்து

[கீ. இராமலிங்கம்]

[திருக்கழுக்குன்றமலையை வலம் வரும்போது வடமேற்கு மூலையில், அடிவாரத்தில் காணும் செந்நிற மண்ணே மலைமருந்து எனப்படுவது. பிணியும் குறையும் நீங்கி, நலமும் நிறைவும் வேண்டுவோர் அம்மருந்தினை மிக்க அன்போடு போற்றி எடுத்து நெற்றியில் அணிவர், சிறிது உள்ளுக்குக் கொள்வர், நோயுள்ள இடங்களில் பூசுவர், நீரிலிட்டுப் பருகுவர். இவ்வாறு நம்பிக்கையோடு செய்து செம்மை பல பூண்டோர் பல்லாயிரவர் என்கின்றனர். பலவகைக் குறைபாடு உள்ளவர்கள் அவற்றை நீக்கிக்கொள்ளும் ஆர்வத்தோடு சங்கு தீர்த்தத்தில் நீராடி, காலையும் மாலையும் மலைவலம் வந்து, இம்மருந்தினை நுகர்வதை, 1923-ம் ஆண்டில் ஒரு திங்கள் கண்டுவர வாய்த்தபோது உள்ளத்து எழுந்த எண்ணங்களே இப்பத்துப் பாக்களாகும்.]

க. மலை மருந் தம்மருந்து சிலைமருந்து
மங்கையமர் பங்கனருள் தங்க மருந்து
இலைமருந் திம்மருந்துக் கிணை மருந்து
ஈசனருள் நேசரெலாம் பூசுமருந்து

உ. நல்லமருந் திம்மருந்து நறுமருந்து
நாதனுறை வேதமலை பாதமருந்து

ஒல்லைவினை ஓட்டிவிடும் ஒருமருந்து
அல்லலெலாம் இல்லைசெயும் அருண்மருந்து

௩. செவ்விய நிற மருந்து சிவமருந்து
செம்மைதரும் எம்முடைய குருமருந்து
எவ்வமெலாம் தெமுறும் எழில் மருந்து
எந்தையவர் சொந்தமலை நந்தமருந்து.

௪. குட்டமொடு துட்டவினை கொலு மருந்து
குன்றவிடும் கொடும்பிணி செலுமருந்து
தொட்டவர்கள் தொட்டவினை தொலைமருந்து
தோடுடையெம் அண்ணலடி தோய்மருந்து

௫. வந்தவர்க்கு வந்தவினை சிந்துமருந்து
வாழ்த்துமவர் தாழ்த்துவினை போழ்த்துமருந்து
கந்தழியெம் எந்தையவர் கழல்மருந்து
காழ்பிணிகள் போழ்வுதரக் கமழ்மருந்து

௬. வேண்டுமவர் வேண்டுவன தருமருந்து
வேட்டுவரும் ஈட்டமெலாம் கூட்டுமருந்து
ஈண்டுமக வேண்டுமவர் தீண்டுமருந்து
ஈசனவர் வேதகிரி நேசர் மருந்து

௭. கல்விநலம் வல்லவர்கள் செல்வ மருந்து
காரிகையார் கோருவன தேரு மருந்து
பல்வயது வெல்லுமவர் நல்ல மருந்து
பரிவுடையெம் கிரியுடையார் பதமருந்து

௮. பல்குபுகழ் மல்குவகை நல்கு மருந்து
பலநலமும் பாரிதனில் பணி மருந்து

செல்வமெலாம் ஒல்லும்வகை சேர் மருந்து
செங்கமலச் சேவடியான் செய்ம்மருந்து

கூ. உற்றவர்கள் அற்றவர்க்கு உற்ற மருந்து
ஊனமுறு மேனியவர் தேனமருந்து
கற்றூர்க்கும் மற்றூர்க்கும் கதிமருந்து
காருண்யன் பேராளன் கழல் மருந்து

க0. அழகுமருந் திம்மருந்தெம் குழகன் மருந்து
அருள்நிறையும் மறைமலைநேர் அருமை மருந்து
பழைமைமருந் திம்மருந்தெம் கிழமை மருந்து
பந்தமற முத்திதரும் எந்தை மருந்து.

---


# பெரிய புராணம்

## செந்தில்வேல் முதலியார் பதிப்பு

ராயல் அளவு முழு கலிக்கோ பைண்டு

ஒவ்வொரு புராணத்தின் இறுதியில் வசனமும் சேர்க்கப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| பிரதி ஒன்றின் விலை ரூ. | 1 | 6 | 0 | தபாற் கூலி வேறு. |
| ஆறு பிரதிகள் ,, ,, | 7 | 8 | 0 | |

கிடைக்குமிடம் :—

சைவசித்தாந்த மகாசமாஜம்,

"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு,

மயிலாப்பூர், சென்னை.

# சுந்தரர் நாடகம்

[வித்வான் - அ. மு. பரமசிவாநந்தம்]

(மலர் ௪௦ - இதழ் - அ - ௬௩௨-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் 2] [காட்சி 3

திருவாரூர் அந்தணர் வீதி

(பல அந்தணர் கூடி பேசுகின்றனர்.)

ஒருவர் :—என்ன இது ! நான் ஒரு கனவு கண்டேன். அது உங்களுக்குத் தெரியுமா ?

மற்றவர்: —நான் கூட ஒரு கனவு கண்டேன். அது அதிசயமானது.

மூன்றுமவர் : —நானும் ஒரு கனவு கண்டேன் ; அதை உங்களுக்குச் சொல்லவா ?

நான்காமவர்:—எல்லோரும் கண்டோம் ; யார் யார் என்னென்ன கண்டோமென்பதைச் சொல்லுங்கள்.

(ஒரு போக்கிரி வருகிறான்; உற்று வந்து கேட்கிறான்.)

முதலாமவர் :—ஐயா, நான் கண்டது ஓர் அற்புதமான கனவு. நம்முடைய கோயிலிலே அடிமை செய்கிறாளே பரவையென்பவள் ; அவளுக்கு ஓர் கணவனை ஆண்டவனே தேடித் தந்திருக்கிறார். யாரோ திருநாவலூரில் பிறந்தவராம்; அந்தணர் குலத்தவராம். அவர் கோயில்களை யெல்லாம் தரிசித்து வரும்பொழுது சிதம்பரம் போனாராம். அங்கு கூத்தாடும் பெருமான் அவரை வேண்டுமென்றே இங்கே போகச் சொன்னாராம். அவரும் இங்கே வந்து சில நாட்களாக இருக்கிறார். அவருக்கு நம் பரவையைக் கலியாணம் செய்துகொடுக்க வேண்டும். இதை ஆண்டவரே நேராக என் கனவில் சொன்னார்.

மற்றவர் :—அடடா ! அப்படியா நானும் அதே கனவு தானே கண்டேன்.

மூன்றுமவர் :—நானும் அப்படியே.

நான்காமவர் :—நாம் எல்லோரும் ஒரே கனவைத் தான் கண்டிருக்கிறோம். ஆதலால் இதில் ஏதோ அதிசயம் இருக்கிறது. வாருங்கள் சென்று சுந்தரரைப் பார்ப்போம்.

போக்கிரி :—நீங்களெல்லாம் கூடி என்னை ஏய்க்கப் பாக்கிறீங்களா ?

மூன்றுமவர் :—என்னையா ஏய்க்கப் பார்க்கிறோம் ? நீர் யார் ; உமக்கு இங்கு என்ன வேலை.

போக்கிரி :—நான் யாரா ? உங்களுக்குத் தெரியாதா ? இப்போ யாரோ சொன்னிங்களே ஒரு குட்டி பாவை என்று. எங்கள் அத்தை மகளுங்கோ அவள்.

இரண்டாமவர்:— சரி அதைப்பற்றி இப்போ என்ன.

போக்கிரி :—இல்லே ; அவளை யாரோ ஒத்திருக்கு கலியாணம் பண்ணனும் மின்னிங்களே. அவர் யாரு ?

நாலாமவர் :—அதைப்பற்றி உமக்கு என்ன ? எங்களைத் தடுக்காதேயும். எங்களுக்கு வேலை இருக்கிறது. நாங்கள் போக வேண்டும்.

(சிறிது செல்கின்றனர்.)

போக்கிரி :—ஐயா ஐயா ! கொஞ்சம் நில்லுங்கோ. அந்தக் குட்டியே நான் கலியாணம் பண்ணிக்கலாமென்று பாத்துங்கிறேன். அதக்குள்ளே நீங்கோ என்னென்னமோ சொல்ரிங்களே. எங்க அத்தைப் பொண்ணை அந்த பாப்பான் கை வைப்பானு பாக்கறேன்.

ஒருவர் :—அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. எல்லோருடைய கனவிலும் ஆண்டவன் வந்து சொல்லி இருக்கிறார். நாங்கள் அதன்படியே கலியாணம் செய்துவைக்கப் போகிறோம்.

போக்கிரி :—ஹா ஹா. அப்படியா! நீங்கள் கலியாணம் பண்ணிவைக்கிறத்துக்குள்ளே நான் போய் அடிச்சுகினு பூடறேன்; இதோ பாருங்கோ.

(ஒருபுறம் ஓடுகிருன் ; மறுபுறம் சுந்தரர் வருகிருர்.)

அந்தணர் ஒருவர் :—அதோ வருகிருரே அவர்தான் சுந்தரர் போலும்.

நான்காமவர்:—ஆம்; ஆம். அவர் எனக்கு நன்ருகத்தெரியுமே.

(சுந்தரர் வருகிருர்.)

ஒருவர் :—ஐயா! நீர்தான் சிதம்பரத்திலிருந்து ஆண்டவனுல் அனுப்பப்பட்டவரோ?

சுந்தரர் :—ஆமாம். உங்களது கனவின் நிகழ்ச்சியை ஆண்டவனுல் அறிவிக்கப்பட்டு இங்கு வந்தேன்.

நான்காமவர்:—வன்தொண்டரே! தம்பிரான் தோழரே! நாங்களிரவு கண்ட கனவின் நிகழ்ச்சியை உம்மிடை எடுத்து இயம்புதல் வேண்டும். எங்கள் யாவர் கனவிலும் தோன்றி ஆரூர் ஆண்டவன் உமக்கும் பரவைக்கும் உயர்மணம் புரிய வைத்தருளச் செப்பினன். அதன்படியே இன்று இந்நன்னுளிலே ஆண்டவன் அருள் கூடிற்று. (பக்கத்திலிருந்தவரை நோக்கி) நீர் சென்று பரவையார்க்கு இச்சங்கதிகளைத் தெரிவித்து அவரைச் சந்நிதிக்கு அழைத்து வாரும். (அவர் செல்கின்றனர்) வன்தொண்டரே வாரும். நாமும் ஆண்டவன் சந்நிதிக்குச் செல்வோம்.

(யாவரும் கோயிலுக்குள் செல்கின்றனர். பரவையார் பாங்கியருடன் ஒருபுறம் வருகின்றனர்.)

அந்தணர் :—புற்றிடங்கொண்ட புண்ணியா! தாங்கள் எம் கனவில் கூறினபடியே உம்சந்நிதியில் இவ்வன்தொண்டருக்கும் பரவையார்க்கும் மணம்செய்து வைக்கிரேும். தங்கள் ஆசிபெரிதும் வேண்டப்படுவதாக.

(சுந்தரரும் பரவையாரும் மாலைமாற்றிக் கொள்கின்றனர்.)

## திருவாரூர் கோயில்

(தேவாசிரியன் மண்டபத்தே அனைவரும் வீற்றிருக்கின்றனர். சுந்தரர் மணக்கோலத்துடன் செல்கின்றனர்.)

சுந்தரர்:— இத்தகைய அடியார்களை ஒருங்கு காணப் பெற்றும் இவர்களுக்கு அடியேன் அடிமை ஆகுநாள் எந் நாளோ என்று வாடுகின்றேன். அண்ணலே! நீயே யருள் புரியவேண்டும்.

(ஆரூரர் காட்சியளித்து நிற்கிறார்.)

திருவாரூர் தியாகேசா! இவ்வழித் தொண்டர்களை நான் பாடப்பெற வேண்டும். அவர் பெருமை எத்தன்மை யதோ?

அசரீரி :—

பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகைவெல்வார் ஊனம் மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையுங் கடந்து நின்றார் இவரை நீ அடைவாயாக.

சுந்தரர் :—அண்ணலே! அடியார்களை நான் எவ்வாறு பாடுவேன்? பாமாலை பாடுந்திறத்தை எனக்கு அருள்செய்ய வேண்டும்.

அசரீரி :—'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்ற இவ்வடியை முதலாவதாகக்கொண்டு பாடுவாயாக.

சுந்தரர் :—

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்

வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்
ஆரூரா ளூரி லம்மானுக் காளே.

---

அங்கம் 3] [காட்சி 1

விருத்தாசலம் கோயில்

(திருக்கோயிலில் சுந்தரர்சென்று வணங்குகிறார்.)

சுந்தரர்:—முதுகுன்றத்து மூர்த்தியே! அன்று குண்டையூர் கிழார்க்குக் கோடி கல நெல்ஈந்து திருக்கோளிலியிலிருந்து அந்நெல்லைக் கொண்டு செல்ல எனக்கு ஆள் அனுப்பிய ஆண்டவனே! கூடலையாற்றூர்க்கு வழிகாட்டிய கொற்றவா! என் இளைப்பை அறியீர்! இம்மை எத்துவார்க்கு அம்மை செய்வதென்? சோலைசூழ் திருமுதுகுன்றமேவிய முதல்வா! உன் அருள் இருந்தவாறு இதுவோ! சிறந்த செல்வனுகி உலகம் ஆக்கிய நீர் ஆடி அசைந்து அடியருடன் அகந்தொறும் பாடிப்படைத்த பொருள் எல்லாம் எற்றுக்கோ! உமையாளுக்கோ! எனக்குப் பொருள்தரல் வேண்டும். அப்பொருள்கொண்டு பரவையாருடன் நான் மகிழ்ந்து வாழ வேண்டும். "மதியிலேன் படும்வெந்துயரம் எல்லாம் நீக்கும் மன்னவா. அமுதாய் உயிர்கெல்லாம் உதித்தவனே! தோற்றம் ஈறு முதலாகிய தூயோய்! உன்னைவணங்கும் இவ்வடியேற்கு வேண்டும் பொன் அளித்தருள்.

(உடனே பெரும் பொற்காசுகள் 12000 எதிர் கண்டார்.)

ஆ! இதுவன்றோ ஈசன் அருள்! என்னை உன் அடிமையாக்கொண்டதை இன்றன்றோ உலகம் அறிந்து கொண்டது. இம்மையோடு அம்மையில் இன்பம் ஆண்டவா. தேவரீர் அருளிய பொன்னெல்லாம் ஆரூரில் உள்ளோர் அதிசயிக்கும்படி அங்கே வரும்படி செய்யவேண்டும்.

அசரீரி :—வன்றொண்ட! இப்பொன்னையெல்லாம் செழு மணிமுத்தாற்றிலிட்டு ஆரூரில் குளத்தே போய் எடுத்துக் கொள்க.

சுந்தரர்:—அவ்வாறே அண்ணல்! (ஆற்றில் போடுகிறார்)

---

அங்கம் 3] [காட்சி 2

திருவாரூர்

(பரவையார் வீடு. தனி அறை. சுந்தரரும் பரவையாரும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.)

பரவையார் :—என் ஆருயிர்க் காதல! என்னை ஈண்டே தனியாகவிட்டு வெளிச் சென்றீரே! எவ்வெத் தலங்களுக்குச் சென்றீர். என்னென்ன அதிசயங் கண்டீர்! எனக்குச் சொல்லலாகாதா ?

சுந்தரர்:—என் ஆசை இடைப்பட்ட எழுபரவையே! புகலூரிற்பொன் பெற்றுவந்து உன்னைவிட்டு நீங்கிய பிறகு திருநன்னிலம், திருவீழிமிழலை, திருவாஞ்சியம், அரிசிற்கரைப்புத்தூர், திருநாரையூர், சித்தீச்சுரம், திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், சிவபுரம், திருக்கலயநல்லூர், திருக்குடமூக்கு, திருவலஞ்சுழி, திருநல்லூர், திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி முதலிய தலங்களைத் தரிசித்து, பூந்துருத்திவந்து ஓர் நாள் உறங்குகையில் இறைவன் கனவில் தோன்றி 'மழபாடி மறந்தனையோ' என்றார்.

பரவை :—ஆ! என்ன அற்புதம் இது. பிறகு என்ன நடந்தது ?

சுந்தரர் :—பிறகு மழபாடி தரிசித்துக்கொண்டு காவிரி இருகரையிலும் உள்ள தலங்களைக்கண்டு திருவானைக்கா தரிசித்துத் திருப்பாச்சிலாச்சிராமம் அடைந்தேன். அங்கு என் செலவுக்குப் பொருள் இல்லாமையால் இறைவனை வேண்டி

னேன். அவர் பொன் கொடுக்காமையால் 'வைத்தனம் தனக்கே' என்னும் திருப்பதிகத்தைப் பாடினேன். பாடி முடிந்ததும் பொன்னும் வந்தது.

பரவை :—சரி, சரி! புலவர்கள் எவ்வாறுயினும் பாடிப் பொன் பெறுகிறார்கள். நாங்கள் என்ன செய்வோம்?

சுந்தரர் :—அப்படி அல்ல! உலக மக்களைப் பாடித் துன் புறுவதைக் காட்டிலும் ஒருவனான உமையோர் பாகனைப் பாடுதல் மேல் அல்லவா? இதை நான் முன்பே சொல்லி யிருக்கிறேனே. புகலூரில் பொன்பெற்ற காலத்து நான் பாடிய பாட்டு உனக்கு நினைவிருக்குமே.

பரவை :—நினைவு இருக்கிறது.

சுந்தரர் :—சரி. எதோ பாடு பார்க்கலாம்.

பரவை :—

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ் சார்வினுந்தொண்டர்தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதேயெந்தை புகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையு மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற் கியாதுமையுற வில்லையே.

சுந்தரர் :—நன்று! அவ்வாறே நான் ஆண்டவனைப் பாடிப் பொன்பெற்றேன்.

பரவை :—பிறகு என் செய்தீர்?

சுந்தரர் :—அப் பொன்னை வழிச்செலவுக்கு வைத்துக் கொண்டு திருப்பைஞ்ஞீலி, திருஈங்கோய்மலை முதலிய தலங் களைத் தரிசித்து, கொங்கு நாடு சென்றேன். திருப்பாண்டிக் கொடுமுடி, திருப்பேரூர், திருவெஞ்சமாக் கூடல், திருக்கற் குடி, திரு இன்னம்பர் முதலிய தலங்களை வணங்கித் திருப் புறம்பயத்தைச் சேரும் அன்புமிக அதையும் தரிசித்துக் கொண்டு திருமுதுகுன்றம் செல்லலானேன். வழி தெரியா

மல் திகைக்க எம்பெருமான் வேதிய வடிவத்துடன் வந்து என்னைக் கூடலையாற்றூருக்கு வழிகாட்டி அழைத்து மறைந்தார். அவர் அருந் திறத்தை வியந்து கூடலைஆற்றூரைத் தரிசித்துத் திருமுதுகுன்றத்தை அடைந்தேன். அங்கே உனக்காகப் பொன் வேண்டினேன். அவரும் அளவிலா நிதி அளித்து அங்கே மணிமுத்தா நதியில் போட்டு நம் ஊர் குளத்தில் எடுத்துக் கொள்ளச் சொன்னார்.

பரவை :—நன்ருய் இருக்கின்றது உம் சொல். விளையாடுகின்றீர்களா ?

சுந்தரர் :—நான் சொன்னல் அப்படித்தான் இருக்கும். பிறகு நீயே கண்டுகொள்வாய்.

பரவை :—அப்படியானல் வாரும் சென்று காணலாம்.

சுந்தரர் :—நான் சென்ற தலங்களையெல்லாம் கூறிமுடிப்பதற்குள் இவ்வளவு அவசரம் ஏன் ?

பரவை :—நன்று ! நன்று ! மேலே சொல்லுங்கள்.

சுந்தரர் :—பிறகு சிதம்பரம் சென்று வணங்கி கருப்பறியலூர், பழமண்ணிப்படிக்கரை, வாழ்கொளிபுத்தூர், கானட்டுமுள்ளூர், எதிர்கொள்பாடி, வேள்விக்குடி முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு இங்கு வந்து உன்னைக் கண்டேன்.

பரவை :—சரி! ஆயிற்றன்றே ! வாரும் குளத்துக்குச் செல்வோம் ; பொன் எடுப்போம்.

சுந்தரர் :—அவ்வாறே புறப்படு. (இருவரும் குளத்துக்குச் செல்லுகின்றனர். அநேகர் மூழ்கிக்கொண்டிருக்கின்றனர். சுந்தரர் வடகரையிற் றங்கித் தடவுகிறுர். பொன் அகப்படவில்லை. சிறிது நேரம் சென்றது.)

பரவை :—ஆற்றில் இட்டுக் குளத்தில் தேடும் அற்புதம் இதுவோ! நான் அறிவேன். சற்று எடுத்துக் காட்டுங்கள்.

சுந்தரர் :—இறைவ! உன் விளையாட்டை நிறுத்தி எனைக் காத்தருள்.

பொன்செய்த மேனியினீர் புலித்தோலை யரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலு மெரித்தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகே ளடியேனிட் டளங்கெடவே.

(உடனே பொன் வந்தது; கரையிற் கொணர்ந்து மாற்று தேய்த்துப் பார்க்கக் குறைகிறது.)

சுந்தரர் :—வழிவழி ஆட்கொண்ட வள்ளலே. உம்முடைய சோதனை இன்னும் மேற்படல் வேண்டுமா? எனைக் கண்டு பலர் ஏசுவது உனை எள்ளுவதாகாதா! அன்றே எனை ஆட்கொண்டபோது என் ஆவியும் உடலும் உடைமையெல்லாமும் உடன்கொண்டிலையோ! இன்று எனக்கு இடையூறு உண்டாமோ. நன்மை செய்யினும் தீமை செய்யினும் நின்னையன்றோ சாரும். இதன் மாற்று நிறைத்தருள்.

(மாற்று நிறைகின்றது. யாவரும் அதிசயிக்கின்றனர்.)

பரவை :—இறைவன் தோழரே! என்னுடைத் தலைவரே! உம்மிடம் இறைவன் காட்டிய அருள்வியந்தோம். (காவலரை நோக்கி) இவைகளை நம் வீடு கொண்டு சேருங்கள். (சுந்தரரை நோக்கி) நாம் ஆண்டவனை வணங்கச் செல்வோம்.

(சுந்தரர் பரவை இருவரும் கோயிலுக்குட் செல்கின்றனர்.)

---

## திருவொற்றியூர் கோயில்

சுந்தரர் :—

பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டும் கலமும் திமிலும் கரைக்கே
ஓட்டும் திரைவாய் ஒற்றி யூரே.

ஒற்றியூர் தியாகேசா! அன்றொரு நாள் குருகாவூருக்கு வழி காட்டிய கொற்றவா! ஏழையேன் பசியால் வருந்தத் திருக்கச்சூரில் அமுது அளித்த ஆண்டவனே! கன்னி யொரு பால் மகிழ்ந்துறையும் கறைக்கண்டா! பல்வேறு நற்றலங்கள் கண்டு தரிசித்தேன். அருள் கனிந்து உன் ஆசை உருக் காட்டி யருள். நான் வேண்டுவது உன் அருளே.

(இவ்வாறு போற்றி நிற்கத் திரை மறைவில் சங்கிலியார் மாலை தொடுத்துக் கொடுத்தார்; கண்ட சுந்தரர் அருகிருந்தவரை நோக்கி.)

அதோ தோன்றும் மின்னற்கொடி போல்வாள் யார்?

ஒருவர் :—ஐயா! அவர் என் நாட்டில் ஞாயிறு என்னும் ஊரில் வேளாளகுலத்து ஞாயிறுகிழார்க்கு மகளாகத் தோன்றியவர். இவர் பெயர் சங்கிலி என்பது. இவர், தாம் இறைவன் அருள் பெற்ற ஒருவருக்கே உரியவரென்றும் மற்றவரை மணந்து கொள்ளேமென்றும் உறுதி கூறி இத் தியாகேசப் பெருமானை வழிபட்டு வருகின்றார். இவரை மணம் பேசவந்த சிலரும் மரித்ததினால் இவருடைய பெற்றோர் இவரை இங்கே கொண்டுவந்து ஓர் கன்னிகா மாடத்தி விருத்தி இறைவனார் திருப்பணியில் ஈடுபடுத்தி இருக்கின்றார்கள். இதுதான் நான் அறிந்தது.

(அனைவரும் செல்கின்றனர்.)

சுந்தரர் :—என்னே இது வியப்பு! இவளோ இறைவனருள் பெற்ற ஒருவருக்கு உரியள் என்று தன்னைக் கூறிக் கொள்ளுகிறுள். எனக்கோ இப்பிறவி இருவரால் வந்தது. கயிலையில் கண்ட அநிந்திதை கமிலினி இருவரும் என் பிறவிக்குக் காரணமாயினர். அவர்களில் பரவை ஒருத்தி போலும். மற்ருெருத்தி சங்கிலி போலும். இறைவனுர் ஆளாய் விதிவழி வாழும் என்னை வருத்தித் தன் ஆரருளால் அவ்விதிவழி அணையாவகைத் தடுத்து ஆட்கொண்ட பொன்னுர் இதழி முடியார்பால் போய் என்னுருயிரும் எழில் மலரும் கூடப் பிணைக்கும் இவளைப் பெறுவேன்.

(இறைவன் சந்நிதி சென்று)

மங்கை ஒருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீள் முடியின்கண்
கங்கை தன்னைக் கரந்தருளும் காதலுடையீர்! அடியேனுக்கு [த்த
இங்கு நுமக்குத் திருமாலை தொடுத்தென் உள்ளத் தொடையவிழ்
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தம் தீர்த்தருள்வீர்.

ஆண்டவ! அரவம் பூண்ட தாண்டவ! என் எண்ணம் எல்லாவற்றையும் நீர் அறிவீர். நானே உமக்கு அடிமை. அச்சங்கிலியோ என் மனத்திண்மைகளை யெல்லாம் உடைத்தெறிந்தாள். நான் செய்வதொன்றும் அறியேனுய்த் தவிக்கின்றேன். தண்ணிலா மின்னெளிர் பவளச் சடையீர்! நீர் தான் எனக்கு அருள்புரிதல் வேண்டும்.

இறைவன் :—(அசரீரியாக) வன்ருெண்ட! சொண்ட கவலை ஒழிக. இன்றிரவே அவள் கனவில் சென்று உனக்கிசையும்படி சொல்லி வருகின்றேன். ஆயினும் அவள் உன்னை இங்கேயே இருக்கச் சபதம் செய்யச் சொல்லுவாள். அதற்கென் செய்வாய்?

சுந்தரர் :—எல்லாமறிந்த வேந்தால்! இவ்வாறு சபதம் செய்ய நேருமாயின் இச்சந்நிதியில் நான் சபதம் செய்யும் போது நீர் மகிழ மரத்தின் கீழ் சென்றிருக்க வேண்டும்.

இறைவன் :—அவ்வாறே ஆகுக. இம்பருலகில் யாவருக்கும் எய்தவொண்ணு இருந்தவத்துக் கொம்பை உனக்குத் தருகின்றேம். நீ கொண்ட கவலே ஒழி.

---

அங்கம் 4] [காட்சி 2

(விடியற்பொழுது ; ஒற்றியூர் திருக்கோயிலில் சுந்தரர் ஒரு புறம் நிற்கிருர். சங்கிலியார் தோழியுடன் மற்ருெரு புறம் வருகிருர்.)

தோழி :—அதோ இருப்பவர்தான் சுந்தரர் ; நம்மைத் தான் எதிர்பார்க்கிருர் போலும்.

சங்கிலி :—தோழி! இரவு இறைவன் கனவில் கூறியபடி அவரைச் சந்நிதியில் சபதம் செய்ய வேண்டாமெனக் கூறி மகிழ மாத்தடியில் சபதம் செய்யச் சொல்.

தோழி :—அப்படியே அம்மா. (சுந்தரர் அருகில் வருகிருர்)

சுந்தரர் :—தோழி! இச்சங்கிலி எனக்குரியவளென்று நேற்று இறைவன் எனக்கருளினுர். இவளுக்கும் அவ்வாறே அருளினதாகக் கூறினுர். ஆகவே இச்சங்கிலியை எனக்குத் தாரும். (அனைவரும் ஒதுங்க சங்கிலி ஒரு புறம் செல்கிருள்.)

காரென்ன கருங்குழலாய்! உன்னை விட்டுப் பிரிவேனென்று வருத்தமுறேல். இங்கு நான் உன்னைப் பிரியாமைக்கு ஒரு சபதம் செய்கிறேன். அனைவரும் வாருங்கள். திங்கள் முடியார் திருமுன்பு செல்வோம்.

தோழி :—எம்பெருமானே! இந்தச் சிறிய விடயத்திற்காக ஒன்றுன உமையோர் பாகன் எதிரிலேயா சென்று சப

தம் செய்ய வேண்டும். வேண்டாம். வேறு எங்காயினும் செய்து கொள்ளலாம்.

சுந்தரர் :—அப்படியாயின் வேறு எங்கே செய்வது?

தோழி :—வேறு எங்கும் வேண்டாம். (மகிழ மரத்தைக் காட்டி) அதோ அந்தப் பச்சை மரத்தடியில் செய்தால் போதும்.

சுந்தரர் :— (சிறிது தயங்கி) சரி வாருங்கள் அங்கே செல்வோம். (அனைவரும் மகிழடியின் கீழ் செல்கின்றனர்; சுந்தரர் மூவாத திருமகிழை முக்காலும் வலம் வந்து.)

இனி நான் இத்திருவொற்றியூரை விட்டு அகலேன்.

தோழி :—சரி இனி சங்கிலி உமது பொருள் ஆவள்.

(அனைவரும் செல்கின்றனர். சுந்தரர் சங்கிலியுடன் கோயிலுக்குள் போகின்றார்.)

---

அங்கம் 4] [காட்சி 3

## திருவெண்பாக்கம் திருக்கோயில்

சுந்தரர் :—என் விருப்பமே என்னைக் கெடுத்தது. இத்தனை நாட்கள் திருவாரூர்த் தியாகேசனைப் பிரிந்திருந்தேனே. மறுபடியும் போக எண்ணிப் புறப்பட்டதும் என் கண்ணும் கெட்டு விட்டதே. மகிழடியின் கீழ் செய்த சபதமே இதற்குக் காரணமாயிற்று என்று உணர்ந்தேன். புற்றிடங்கொண்ட புராதனனை மறக்கக்கூடவில்லையே. வசந்தகாலமும் தோன்றிற்று. இவ்வசந்தவிழாவைக் கண்கொண்டு காணப்புறப்பட்டதும் கண் கெட்டனவே. மெய்யுறவு கண்ணார்பால் சூளறவு மறுத்ததினால் இவ்வினை வந்து எய்தியது கொல்லோ. இத்துயர் நீங்க என் செய்வேன். மூன்று கண்ணுடைய முதல்வா! என் கண்ணையுங் கூடவாகொள்ள வேண்டும். ஆ! இது வெண்பாக்கம் திருக்கோயில் போலும். வெண்பாக்கம் மேவிய

விகிர்தா ! இப்பொய்யடியேன் பிழைத்திடினும் வெறுத்திட வேண்டாவோ. அருள் செய்ய வல்லாய் ! கண் தராவிட்டா லும் வழிகாண ஓர் ஊன்று கோலாயினும் கொடுத்தருள். நீ கோயிலில் உள்ளாயோ ? உன் காதிரண்டும் கேட்கவில் லையோ ?

அசரீரி :—உளோம் போகீர். (ஊன்றுகோல் ஒன்று சுந்தரர் கையில் வந்தது.)

சுந்தரர் :—

மான்றிகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றவருள் செய்தளித்தா யென்றுரைக்க வுலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயி லிங்கிருந்தா யோவென்ன
ஊன்றவதோர் கோலருளி யுளோம்போகீ ரென்றானே.

---

அங்கம் 4] [காட்சி 4

## ஆரூர் திருக்கோயில்

சுந்தரர் :—இதோ உன் அடியான், உன்னால் ஆட்கொள் ளப்பட்டவன், உன்னருள் வழி நின்றவன், ஒற்றைக் கண் கெட்டு நிற்கின்றேன். கண் காணாது குன்று முட்டி குழியில் விழுந்தவனானேன். வழி காணாது அலமந்தேன். உனக்கு ஆட்பட்டு நாய்போல் நிற்கும் எனக்கு வாய் திறவாது இருக் கின்றாயே ? அன்று காஞ்சியில் என் வேண்டுகோளுக் கிரங்கி ஒற்றைக் கண்ணளித்த உத்தமா ! பாரும் ஊரும் அறிய நீதான் என் கண்கொண்டு பழிப்பட்டாய். ஆ'யும் பேடை அடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே ! திருவாரூர் இருக்கை யாகக் கொண்டீர். இதுவோ நம் திருவருள்.

விற்றுக் கொள்வீ ரொற்றி யல்லேன் விரும்பி யாட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை கொத்தை யாக்கினீர்

எற்றுக் கடிகே ளென்கண் கொண்டீர் நீரே பழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே.

(மற்றைக் கண் தெரிகிறது. எழுந்து பரவசப் படுகின்றார்.)

சுந்தரர் :—ஹா! என்ன அதிசயம். என் இரு கண்களும் தெரிகின்றனவே. தியாகேசா! இதைத் தவிர உன்னை மற்றொன்றும் கேட்கின்றேன். பரவையோ நான் அவளைப் பிரிந்ததினால் என்மேல் வருத்தப்பட்டு நான் அனுப்பியவைகளையெல்லாம் புறக்கணித்து விட்டாள். சங்கிலியை மணந்த வருத்தம் அவள் மனதை வாட்டுகின்றது போலும்! சடைமுடி அண்ணலாகிய உமது அருள்வழியாலன்றோ இவ்விருவரை நான் மணம் புரிந்தது. பரவையைக் கண்டு நாட்கள் பலவாயின. அவளைக் கண்டு களிக்கிலேனேல் என் மனம் சாந்த நிலையடையாது. ஆரூரம்மானே! எக்காலும் என்னை இன்னல் படாதுகாத்து வந்த நீர் இன்றும் என்னைக் காத்தருள வேண்டும்.

முன்னைவினையால் இவ்வினைக்கு மூலமானாள் பாலனைய
என்னையுடையாய் நினைந்தருளாய் இந்தயாமத்தெழுந்தருளி
அன்னமனையாள் புலவியினை அகற்றில் உய்யலாமன்றிப்
பின்னையில்லை செயலென்று பெருமானடிகள் தமைநினைந்தேன்.

(இறைவன் மனித உருவத்தோடு வருகிறான்.)

இறைவன் :—வன்றொண்ட! உன் மனதில் உற்ற கவலை யாது?

சுந்தரர் :— (விழுந்து வணங்கி) அன்று அங்கு ஒற்றியூரில் நீரே அருள் செய்ய வடிவேல் ஒண்கண் சங்கிலியை அடியேன் மணஞ்செய்தேன். அத்திறத்தையெல்லாம் பரவை அறிந்தாள்; அறிந்த அவளிடம் நான் குறுகின் இறப்பதாகக் கூறுகின்றாள். தாயினும் நல்ல தோழருமான தம்பிரா

ஞரே! ஆய அறிவும் இழந்தயர்கின்றேன். என்னயர்வு நோக்கி இவ்விரவே போய்ப் பரவை புலவி தீர்த்துத் தாரும்.

இறைவன் :—நம்பி! நீ துன்பம் ஒழி. நான் உனக்கோர் தூதனுகி இப்பொழுதே மணிப்பூண் பரவைபாற் போகின்றேன். நீயும் அவள் வீட்டு அருகில் வந்திரு.

---

அங்கம் 4] [காட்சி 5

பரவை மனை

பரவை :—ஹா! இவ்வாடவர் செயலை அன்றே கண்டிருந்தும் யோசியாது போனேன். வண்டே அனையர் மாந்தர் என்பதைப் பண்டே அறிந்திருந்தேனுயினும் தியாகேசன் அருள்பெற்ற ஒருவர் இவராகலின் இவர்க்கு மணமிசைந்தேன். அவர் என்னை ஏமாற்றி ஒற்றியூர் சென்று ஓர் பெண்ணை மணந்தார். பிறகு இங்குவந்து பூசல் தீர்க்கின்ருர். கருணையங் கடலே! இவையெல்லாம் உன் திருவிளையாடல் தானே? இவ்வாறெல்லாம் என்னைச் சோதித்துக் கஷ்டப்படுத்துதல் கூடுமோ? எனக்கோ உணவு செல்லவில்லை. உறக்கம் கொள்ளவில்லை. மனம் விரும்பவில்லை. எந்நேரத்திலும் மகிழ்ச்சி தானும் இல்லை. ஆரூர் அம்மானே! உன் சோதனை இதுவோ?

தோழி ஒருத்தி :—அம்மா! நம் கோயில் பிராமணர் தங்களைக் காண வந்துள்ளார்.

பரவை :—அப்படியா!

(எழுந்து அழைத்துவந்து உட்காரச் செய்கிருள்.)

பரவை :—அந்தணப் பெரியீர்! என்னை நாடி பெருகு புவனம் சலிப்பின்றி, பேயும் உறங்கும் பிறங்கு இருள்வாய் இவ்வளவு தூரம் வரக் காரணம் யாதோ? (தொடரும்)

# சமாஜக் கூட்டங்கள்

1. இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் ...கானந்த நிலயத்தில் சமாஜப் பொதுக் கூட்ட மொன்று 11-7-37ல் ...ாணிக்க வாசகர் திரு நக்ஷத்திரத்தைக் கொண்டாடக் கூடிற்று. ...சென்னைப் பல்கலைக் கழகத்தமிழ்ப் பேராசிரியர் திரு. எஸ். வையா ...ரிப் பிள்ளையவர்கள் தலைமை வகித்தார்கள். பண்டிதமணி திரு-மு. ...திரேசச் செட்டியாரவர்கள் திருவாசகத்தின் பெருமையை விளக்கு ...முகத்தால் அது மாணிக்கவாசகமென்றும் தேனென்றும் கூறப்பட்ட உட்கருத்து, பால் நினைந்தூட்டும் என்பது போன்ற சில பாடல்களி லுள்ள பக்திச்சுவை இலக்கிய நயம், சில பத்துக்களில் ஒரு பாட்டிற் கும் அடுத்துவரும் பாட்டிற்கு முள்ள தொடர்பு முதலிய பல அரிய பொருள்களை அழகாக விரித்துரைத்தார்கள். தலைவரவர்கள் தகுந்த படி முடிபுரை கூறினார்கள். திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் தலைவருக்கும் சொற்பொழிவாளர்க்கும் நன்றி கூறித் திரு. செட் டியா ரவர்களைத் திருவாசக ஆராய்ச்சியை அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பிலேனும் தனித்த முறையிலேனும் விரிவாக எழுதி அச்சிட்டு வெளியிடுமாறு வேண்டிக்கொண்டார்கள்.

2. திருக்கொள்ளம்பூதூரில் 10-8-37ல் நடைபெற்ற மண்ட ...ாபிஷேக பூர்த்தி நாளன்று சமாஜப் பொதுக்கூட்டமொன்று சமா ...க் காரியதரிசியின் தலைமையிற் கூடிற்று. ஆலங்குடித் தமிழாசிரி ...ர். திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும், திரு. மறைதிருநாவுக் ...ரசரும், மற்றொரு சைவ இளைஞரும் சொற்பொழிவுகள் நிகழ்த் ...னார்கள். வேடம்பூர் கொள்ளம்பூதூர் வாசிகளின் சார்பாகத் திரு ...ராமன் செட்டியார் புதல்வர்கட்கும், சமாஜத்தின் சார்பாகச் ...மாஜ போஷகர் திரு. பெ. ராம. ராம. சித. சிதம்பரம் செட்டி ...யார் அவர்கட்கும் வாழ்த்துப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. திரு. ...ாமி. வேலாயுதம் பிள்ளையவர்களால் அனைவருக்கும் நன்றி கூறப் ...பட்டது. பல பேரறிஞர்களும் பெருஞ் செல்வர்களும் நல்லன்பர் ...களும் அனுப்பிய வாழ்த்துப் பாடல்களும் கடிதங்களும் அச்சிடப் பெற்று "வாழ்த்துமஞ்சரி" என்ற நூல் வடிவில் மண்டலாபிஷேக வெளியீடாக வழங்கப் பெற்றன.

3. சமாஜத்தின் ஆவணி மாதக் கூட்டம் 29-8-37ல் சமாஜ அன் ...ர் திரு. ச. நடேச முதலியாரவர்களால் தாம்பரம் ஸ்டேஷனுக் கரு ...லுள்ள சேலையூரில் புதுவதாக அமைக்கப்பெற்றுள்ள "சண்முக ...லயம்" என்னும் இல்லத்தில் மிகச் செம்மையாக நடைபெற்றது. ...மாஜ நிர்வாகக் குழுவினரும், இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிர ...ணிய பக்தஜன சபை யன்பர்களும் வரவேற்கப்பட்டனர். நண்பக

வில் நல்விருந்தும், மாலையில் சிற்றுண்டியும் அளிக்கப்பட்டன. மாலை 4¼ மணிக்குச் சைவத்திருவாளர்-திரு. வி. உலகநாத முதலியாரவர்கள் தலைமையில் பெருஞ்சொற் கொண்டல் புரிசை - திரு. முருகேச முதலியாரவர்கள் "முருகன் அவதாரம்" என்பது பற்றி மிக அழகாகப் பிரசங்கித்தார்கள். சமாஜ உதவிக் காரியதரிசியும் இராயப்பேட்டை சபைக் காரியதரிசியுமாகிய திரு ஜி. கலியாணம் பிள்ளையவர்கள் தலைவரவர்கட்கும், சொற்பொழிவாளருக்கும், அன்பர் நடேச முதலியாருக்கும் அனைவருடைய நன்றியையும் செலுத்தி னார்கள்.

4. சமாஜத்தின் புரட்டாசிமாதக்கூட்டம் பெங்களூரில் விசேஷ மகாநாடாக நடைபெறும். ஐப்பசி, கார்த்திகை மாதக் கூட்டங்களை நடத்திவைக்க விரும்புவோர் தாமதியாது காரியதரிசிக்கு விண்ண பம் செய்வார்களாக.

---

## சிவஞான பாடியம்

சைவ சித்தாந்த சாத்திரப் பெருங் கருவூலமாக விளங்கும் சி ஞானபாடியம், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் அடக்கவிலை சுத்தப் பதிப்பாக வெளி வந்துவிட்டது. இப்பதிப்பில் சிவஞா போதமூலம், சிவஞான சுவாமிகளுடைய பாடியம், வடமொழிச் சி ஞானபோத மூலம், சிவஞானபோதச் சூர்ணிக்கொத்து, மெய்கண் டார் வரலாறு, சிவஞான சுவாமிகள் வரலாறு, பாடியத்தைப்பற்றி திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதி ஆராய்ச்சி அணிந்துரை முதலியன அடங்கியுள்ளன. இவ்வரிய நூ இம்முறையில் இவ்விலைக்கு எவராலும் தரப்படவில்லை. நல் கிளேஸ் காகிதத்தில் ௫௭௩+40 பக்கங்கொண்ட முழுக் கலிக்கோ பைண்டு செய்யப்பெற்ற அழகிய பதிப்பு.

**தனிப்பிரதி விலை ரூபா ஒன்று;** ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஒன்ப

**பதினொரு பிரதிகள் விலை ரூபா பத்து ;**

ரயில்வே பார்சல் கூலி, தபாற் கூலி வே

**உடனே பிரதிகட்கு மணியார்டர் அனுப்புக.**

---

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapa Mudali Street, Royapettah, Edited and Published by A. So sundaram Chettiar, M. A., for the Saiva Siddhanta Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran S Mylapore, Madras.